# பாட்டாளி சிந்தனை

Volume 26 No. 7

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

March 2016

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3



5 மே, 1818 – 14 மார்ச், 1883

*“இயந்திரங்களின் வளர்ச்சியோ, உற்பத்திக்கு அறிவியலின் பிரயோகமோ, தகவல்தொடர்பில் புதியவசதிகளோ, புதிய காலனிகள் பிடிக்கப்படுவதோ, வேற்று நாடுகளுக்குக் குடிபெயர்வதோ, புதிய சந்தைகள் கிடைக்கப்படுவதோ, சுதந்திர வர்த்தகமோ, இவையனைத்தும் சேர்ந்து ஒன்றாக நடந்தாலோகூட, ஆலைத்தொழிலாளிகளின் வறுமையைப் போக்காது; மாறாக இன்றைய தவறான அடித்தளத்தின்மீது நடக்கும் உழைப்பின் உற்பத்திச் சக்தியின் புதிய வளர்ச்சி ஒவ்வொன்றும் சமூக ஏற்றத்தாழ்வை ஆழமாக்கியே தீரவேண்டும்; மேலும், அது சமூக மோதலுக்கு இட்டுச்சென்றாக வேண்டும். இது ஐரோப்பாவின் எல்லா நாடுகளிலும் முன்னபிப்பிராயம் கொண்டிரா மனிதனின் மனதிற்கு சோதித்து நிரூபிக்கமுடிந்த, அதேசமயம் மக்களை முட்டாள்களின் சுவர்க்கத்தில் மூழ்கடிப்பதில் ஆர்வம் கொண்டிருப்போரால் மட்டுமே மறுக்கப்படும் ஒரு உண்மையாகிவிட்டது. ...எனவே, அரசியல் அதிகாரங்களை வென்றெடுப்பது உழைக்கும் வர்க்கத்தின் மாபெரும் கடமையாகிவிட்டது.”*

*(உழைக்கும் மனிதர்களின் சர்வதேச சங்கத்தின் வரைவு விதிகள், செப்டம்பர் 28, 1864)*

**காரல் மார்க்ஸ்**



21 டிச, 1879 – 5 மார்ச், 1953

*“... விடுதலை இயக்கத்தின் தலைமை எதிரியான பூர்ஷ்வாக்கள் – தற்போது அவர்களே வேறாகி விட்டார்கள்– பெருமளவு மாறிவிட்டார்கள், மேலும் அதிக பிற்போக்குவாதிகளாகிவிட்டார்கள், மக்களுடன் தொடர்பை இழந்துவிட்டார்கள், இதன்மூலம் தம்மை பலகீனப்படுத்திக்கொண்டு விட்டார்கள். முன்பெல்லாம் பூர்ஷ்வாக்கள் சுதந்திர சிந்தனையாளர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்ள முடிந்தது, பூர்ஷ்வா ஜனநாயக சுதந்திரத்தை உயர்த்திப் பிடிக்க முடிந்தது, இதன்மூலம் மக்களிடையே பிரபலம் அடையமுடிந்தது. தற்போதோ, இந்த சுதந்திரத்தன்மையின் நூலிழைகூட எஞ்சியில்லை. ‘தனிநபரின் சுதந்திரம்’ என்றழைக்கப்படுவது இனியும் நிலவவில்லை – தனிநபரின் உரிமைகளெல்லாம் மூலதனம் வைத்திருக்கும் நபர்களுக்கு மட்டுமே நீட்டிக்கப் படுகின்றன; ஏனைய குடிமக்கள் எல்லாம் மனித கட்சாப் பொருட்களாக, சுரண்டப்படுவதற்கு மட்டுமே உகந்ததாகக் கருதப்படுகின்றனர். மனிதர்களுக்கிடையேயும் தேசங்களுக்கிடையேயும் சம உரிமைகள் என்ற கோட்பாடு சேற்றில் புதைக்கப்பட்டுவிட்டது. சுரண்டும் சிறுபான்மை எண்ணிக்கையினருக்கு முழு உரிமை, சுரண்டப்படும் பெரும்பான்மையினருக்கு ஒரு உரிமையும் இல்லை என்ற கோட்பாட்டால் அது இடமாற்றம் செய்யப்பட்டுவிட்டது. பூர்ஷ்வா ஜனநாயக உரிமைகள் என்ற பதாகை வீசி எறியப்பட்டுவிட்டது... முன்பு, தேசத்தின் தலைமையாக (தலைவர்களாக) பூர்ஷ்வாக்கள் கருதப்பட்டனர், தேசத்தின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் அவர்கள் உயர்த்திப்பிடித்தனர், அவற்றை “அனைத்திற்கும் மேலாகக்” கருதினர். அந்த “தேசியக் கோட்பாட்டின்” அடையாளம்கூட தற்போது எஞ்சியிருக்கவில்லை. தேசத்தின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் தற்போது பூர்ஷ்வாக்கள் டாலருக்கு விற்கின்றனர். தேசத்தின் சுதந்திரம் தேசத்தின் இறையாண்மை என்ற பதாகை காற்றில் வீசி எறியப்பட்டுவிட்டது.”*

*(19வது கட்சி காங்கிரஸில் ஆற்றிய உரை, தேர்வு நூல் தொகுதி 14, பக் 12)*

**ஜே வி ஸ்டாலின்**

# ஜே என் யு சம்பவத்தை வைத்து தூண்டப்படும் தேசிய வெறிவாதம்

உயர்ந்த கல்வித் தரத்திற்கான புகழ்பெற்ற ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தைப் (ஜேஎன்யு) பற்றி தவறான டிவிட்டர்கள், இட்டுக்கட்டிய வீடியோக்கள், போலியாக புனையப்பட்ட புகார்களையும் திரிக்கப்பட்ட உண்மைகளையும் வைத்துக் கொண்டு, அதோடு அதிகார பலத்தையும் பிரயோகப் படுத்தி, அப்பல்கலைக்கழகத்தை அமைப்புரீதியாக மட்டுமல்லாது தங்களது சித்தாந்தக் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு பாஜக அரசாங்கமும், அதன் மாணவர் அமைப்பான ஏபிவிபியும் முயற்சித்து வருகின்றன. இவர்களின் நடவடிக்கைகளைக்கண்டு நாட்டின் சரியாக சிந்திக்கும் ஜனநாயக எண்ணம் கொண்ட கல்வியை நேசிக்கும் மக்கள் ஆழ்ந்த கவலையடைந்துள்ளனர்.

கல்வி நிலையங்களின் தன்னாட்சி அதிகாரத்தின் மீது தலையிடுதல், ஆளும் கட்சியின் மதவாத–அடிப்படைவாத–குருட்டுவெறிவாத சித்தாந்தம்–தத்துவத்தைத் திணிப்பதற்கு அரசாங்கமும் ஆளும் கட்சியும் முயற்சித்தது. சென்னை ஐஐடியில் அம்பேத்கர்–பெரியார் படிப்பு வட்டத்தை தடை செய்தது, புனாவில் உள்ள திரைப்படக்கல்லூரி (எஃப்டிஐஐ) மற்றும் சினிமா தணிக்கைக் குழுவில் அரசியல் தலையீடு, வரலாற்று ஆராய்ச்சிக்கான இந்தியக் கவுன்சில் மாத இதழின் ஆலோசனைக் குழுவைக் கலைத்தது போன்ற சம்பவங்களில் காண முடிந்தது. அதன் பின்பு ஹைதராபாத் மத்தியப் பல்கலைக்கழகத்திலும் பின்னர் தற்போது ஜேஎன்யுவிலும் நடைபெற்றுவரும் சம்பவங்கள், இக்கட்சியிடம் ஒரு குறிப்பிட்ட திட்டம் இருப்பதை அம்பலப்படுத்தியுள்ளன. தர்க்கம், காரணம் மற்றும் உண்மையின் அடிப்படையில் இந்த மொத்த விஷயங்களையும் பகுத்தாயும் முன்பாக, நாட்டையே உலுக்கியுள்ள இரண்டு பெரிய சம்பவங்களை சுருக்கமாக மக்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

### நடந்த சம்பவங்களின் முக்கிய உண்மைகள்

ஆர்எஸ்எஸ்–ஏபிவிபி ஆகியவற்றின் கைவரிசையாலும் இரண்டு முக்கிய மத்திய அமைச்சர்களின் பாரபட்சமான ஜாதிய அணுகுமுறை மற்றும் நடவடிக்கையாலும் ஹைதராபாத் மத்தியப் பல்கலைக் கழகத்தில் யுஜிசி உதவித்தொகை பெற்ற அற்புதமான இளம் ஆராய்ச்சி மாணவர் ரோஹித் வெமுலா விடுதியில் ஜனவரி 17இல் தற்கொலை செய்து கொள்ள நேர்ந்தது. ஹைதராபாத் பல்கலைக் கழகம் சமீபகாலமாக ஜாதியவாத, பயங்கரவாத மற்றும் தேச விரோத அரசியல் நடக்கும் இடமாக மாறிவிட்டது என்று மத்திய தொழிலாளர் அமைச்சர் எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து ரோஹித் மற்றும் சில மாணவர்களுக்கு உதவித்தொகையை நிறுத்துமாறு பல்கலைக்கழகத்திற்கு மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் கடிதம் எழுதாமல் இருந்திருந்தால், அதனைத் தொடர்ந்து ரோஹித் உள்ளிட்ட ஐந்து தலித் ஆராய்ச்சி மாணவர்கள் தேச விரோதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு, விசாரணைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டு, மிரட்டப்பட்டு, தொல்லைக்குள்ளாக்கப்பட்டு, அடிப்படை வகுப்புகளைத் தவிர விடுதி உள்ளிட்ட பல்கலைக்கழகத்தின் வேறு எந்த வசதிகளையும் பயன்படுத்தக்கூடாது என்றும் தெரிவிக்காமல் இருந்திருந்தால், ரோஹித் இந்தத் துயரமான முடிவிற்கு சென்றிருக்க மாட்டார். பல்கலைக்கழகத்திடம் நியாயம் கிடைக்காததால் இவர்கள் எல்லாம் ஏபிவிபியின் தாக்குதலுக்கு ஆளாயினர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. ரோஹித் வெமுலாவின் இந்தத் துயர மரணத்திற்குக் காரணமான மத்திய அரசாங்கம் மற்றும் அதன்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## ஜே என் யு சம்பவம்

# தன்னெழுச்சியாக நடந்ததல்ல திட்டமிட்ட செயலேயாகும்

1ம் பக்கத் தொடர்ச்சி

அமைச்சர்களின் இந்த நடவடிக்கையை புகழ்பெற்ற கல்வியாளர்கள் உள்ளிட்ட மனசாட்சியுள்ள மக்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர். ஆனால் ஆர்எஸ்எஸ்–பாஜக இதற்கு கொஞ்சமும் கலங்க வில்லை. அவர்களது ஆதரவு மற்றும் துணை வேந்தரின் துணையோடு காவல்துறை பல்கலைக் கழக வளாகத்திற்குள் நுழைந்தது, ரோஹித்தின் மரணத்திற்கு எதிராகவும் ஆர்எஸ்எஸ்–பாஜக–ஏபிவிபியை எதிர்த்தும் போராடிய பல மாணவர் களைக் கைது செய்ததோடு அவர்களில் 5 பேருக்கு தண்டனையும் வழங்கப்பட்டது.

ஹைதராபாத் பல்கலைக்கழக துயர சம்பவம் நடைபெற்ற சில நாட்களிலேயே டில்லி ஜேஎன்யு சம்பவம் நடைபெற்றது. பிப்ரவரி 9 அன்று ஜேஎன்யு வளாகத்தில் "காஷ்மீர் மக்களின் ஜனநாயக உரிமை மற்றும் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்திற்கு துணைநிற்போம்" என்ற ஒரு நிகழ்ச்சிக்கு சில மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். அந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது சில மாணவர்கள் திடீரென பிரிவினைவாத முழக்கங் களை எழுப்பியுள்ளனர், அது நிச்சயம் கண்டிக்கத் தக்க ஒன்றுதான். அதனைத் தொடர்ந்து உடனடியாக இடதுசாரி மாணவர் அமைப்புகள் தேச–விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கூறி அவர்கள் மீது பல்கலைக்கழகத்திற்கு உள்ளேயும் வெளியிலும் ஏபிவிபியினர் தாக்குதல் நடத்தினர். தேசவிரோத செயல்பாடுகளைத் தடுக்கிறோம் என்ற பெயரில் பல்கலைக்கழக வளாகத்தினுள் நுழைந்த மத்திய பாஜக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள காவல் துறையினர் அங்கே வன்முறையில் ஈடுபட்டனர், ஜேஎன்யு மாணவர் தலைவரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாணவர் அமைப்பான ஏஐஎஸ்எஃப்யின் உறுப்பினருமான கன்னையா குமாரையும் வேறு இருவரையும் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 124 ஏ வின் படி தேச துரோக வழக்குப் பதிவு செய்து எவ்வித வாரண்டும் இல்லாமல் கைது செய்தனர். இதுபோன்ற பிரிவினைவாத கோஷங்கள் எழுப்பியதை ஜேஎன்யு மாணவர் அமைப்பும் மற்ற இடதுசாரி மாணவர் அமைப்புகளும் கண்டித்த தோடு இதுபோன்ற நிகழ்ச்சிகளோடு தங்களுக்குத் தொடர்பு இல்லை என்று தெரிவித்தபின்னரும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த ஜனநாயக விரோத மற்றும் பாசிச நடவடிக்கையால் இயற்கையாகவே நாட்டின் மாணவ சமுதாயமும் கோபமடைந்தது. பேச்சு சுதந்திரத்தை தடுப்பதற்கும், தங்களது கருத்துக்களுக்கு நடவடிக்கை களுக்கு ஏற்படும் எவ்வித எதிர்ப்பு குரலையும் தேச விரோதம் என்று முத்திரை குத்துவதென்ற ஆர்எஸ்எஸ்–பாஜக–ஏபிவிபியின் நோக்கத்தையும் இந்த சம்பவம் காட்டுவதாக மாணவர்கள் பார்க்கின்றனர்.

14 பிப்ரவரி அன்று டில்லி பாட்டியாலா நீதிமன்றத்தில் நீதிபதி முன்பாக ஆஜர்படுத்து வதற்காக கன்னையா குமார் கொண்டுவரப் பட்டபோது ஆர்எஸ்எஸ்–பாஜகவோடு தொடர் புடைய ஒரு வன்முறை கும்பல் வழக்கறிஞர்கள் உடையணிந்து கன்னையாகுமாரையும் அவருடன் வந்த ஜேஎன்யு ஆசிரியர்கள், மாணவர்களை அடித்து உதைத்தனர். பாஜக எம்எல்ஏ ஓபி சர்மாவும் சேர்ந்து கன்னையாவையும் அவருடன் வந்தவர் களையும் தாக்கினர். அங்கிருந்த பத்திரிகையாளர் கள்மீதும் அவர்கள் பாய்ந்தனர். இந்த ரௌடித் தனத்தை காவல்துறையினர் தடுக்காமல் வேடிக்கை பார்த்தனர். மற்றொருபுறம் பாஜக அரசாங்கமும் ஏபிவிபியும் இந்த ஒட்டுமொத்த தாக்குதலையும் ஆதரித்து தேசவிரோத சக்திகளை இப்படித்தான் தாக்கவேண்டும் என்று பேசினர். தாய் இந்தியாவிற்கு மரியாதை செய்யாத எதையும் சகித்துக்கொள்ள மாட்டோம் என்று மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கும் மனிதவள மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருதி இராணியும் தொடர்ந்து பேசி வருகின்றனர். ஜேஎன்யு மாணவர்களுக்கு 26/11 மும்பை தீவிர வாதத் தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட ஜமாத்–உட்–தாவாஹ் தலைவர் ஹபீஸ் சயித்தின் ஆதரவு உள்ளதென்றெல்லாம் ராஜ்நாத் சிங் கூறிவருகிறார். ஆனால் இதை ஹபீஸ் என்பவர் மறுத்துள்ளார்.

### பாஜகவும் சங்பரிவாரங்களும் ஒரு நிச்சயமான திட்டத்தை உருவாக்கியுள்ளன

இச்சம்பவத்தின் உண்மைநிலை இதுதான். ஆர்எஸ்எஸ்–பாஜக–ஏபிவிபியினர் தேசியவாதமும் தேசபக்தியும் எங்களுக்கே சொந்தம் என்று மூர்க்கத்தனமாகக் கூறுகின்றனர். நாத்திகவாதி களையும் இடதுசாரி கம்யூனிஸ்டுகளையும் தேச விரோதிகள் என்றும் தீவிரவாதிகள் என்றும் முத்திரை குத்துகின்றனர். இவையெல்லாம் ஆளும் கட்சியினரின் ஒரு நயவஞ்சக அரசியல் திட்டத்தை தெளிவாகக் காட்டுகிறது. மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் சமீபத்தில், ரோஹித் வெமுலா தற்கொலை குறித்து பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தபோது உண்மைக்கு மாறான தகவல்களைத் தெரிவித்தார், அதை ரோஹித்தின் தாயார் மிகுந்த வேதனையோடு மறுத்தார். அதேபோல், ஆட்சேபணைக்குரிய கோஷங்களை கன்னையா குமார் எழுப்பினாரென்பதற்கான எவ்வித உறுதியான ஆதாரத்தையும் டில்லி போலீ சாரால் சமர்ப்பிக்க முடியவில்லை. அந்த கோஷங் களை கன்னையகுமார் எழுப்பவில்லை என்பதை அவ்விடத்திலிருந்த ஒரு பாதுகாவலரும் போலீஸும் உறுதிப்படுத்தியுள்ளனர். அந்த ஆட்சேபணைக்குரிய கோஷங்களை உள்நோக்கத்துடன் சிலர் எழுப்பினார் களா அல்லது சில குறுகிய சக்திகளால் திட்டமிட்டு அங்கு அனுப்பப்பட்டார்களா என்பது இன்னும் தெளிவாகவில்லை.

கிடைக்கக்கூடிய விவரங்களையும் தொடர்ந்து நிகழும் சம்பவங்களையும் பார்க்கும்போது ஜேஎன்யு சம்பவம் திடீரென நடந்ததல்ல, அது முன்கூட்டியே திட்டமிட்டு நடத்தப்பட்டது என்பது தெரியவரும். கன்னையா குமார் பிரிவினைவாத கோஷங்களை எழுப்புவது போன்று சமூக வலைதளங்களிலும் சில முன்னணி தொலைக்காட்சிகளிலும் காட்டப் படும் வீடியோ, அவர் மீது பொய்யாக குற்றச் சாட்டைப் பதியவேண்டும் என்ற நோக்கத்தோடு புனையப்பட்டது என்று தெரியவந்துள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், மோடி ஆட்சிக்கு வந்தபின் அனைத்து தொலைக்காட்சிகளும் வகுப்பு வாதமயமாகிவிட்டது எனக்கூறியும் விஷ்வ தீபக் என்ற 'Z நியூஸ்' சேனலின் இளம் ஊடகவியலாளர் தனது வேலையை ராஜினாமா செய்துள்ளார். தேசியவெறியை தூண்டுவதற்காக மீண்டும் மீண்டும் ஒளிபரப்பப்படும் இந்த வீடியோவில் 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்ற கோஷமே இல்லை என்பதை அவர் அம்பலப்படுத்தியுள்ளார். குருட்டுத் தனமான முன்னபிப்பிராயத்தால் 'பாரதிய கோர்ட் ஜிந்தாபாத்' என்பது 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்று திரிக்கப்பட்டுள்ளது. விஷ்வ தீபக் தனது திறந்த ராஜினாமா கடிதத்தில், ரோஹித் வெமு லாவைத் தற்கொலைக்குத் தள்ளியதில் ஏபிவிபி தலைவர்கள் மற்றும் மத்திய பாஜக அமைச்சர் பண்டாரு தத்தாத்ரேயாவின் பங்கை நீர்த்துபோகச் செய்யும்படியும் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக வாதாடும்படியும் Z ஊடக குழுமமாகிய தங்களுக்கு அறிவுறுத்தல்கள் வந்ததாகவும் கூறி யுள்ளார். ஆர்எஸ்எஸ்–பாஜகவால் துரோகி என்று முத்திரை குத்தப்பட்டிருக்கும் உமர் காலித் என்ற மற்றொரு ஜேஎன்யு மாணவரின் சகோதரிக்கு பாலியல் வன்முறை மற்றும் ஆசிட் தாக்குதல் மிரட்டல் வருவதாகவும் அவர் தெரியப்படுத்தி யுள்ளார். 'ஜேஎன்யு கிரிமினல்களின் வளாகமா அல்லது கோர்ட் வளாகத்திற்குள்ளேயே இடதுசாரி செயல்பாட்டாளர்களைத் தாக்கிய பாஜக எம்எல்ஏ உண்மையான கிரிமினலா' என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

விஷ்வா கூறியுள்ளது போக, சம்பவம் நடை பெற்றபோது ஜேஎன்யு வளாகத்தில் கன்னையா ஆற்றிய முழு உரையும் பிரதான ஊடகங்களில் தற்போது வெளியாகியுள்ளது. அதில் ஒரு இடத்தில் கூட தேசதுரோக குற்றச்சாட்டிற்கான காரணம் இல்லை. பயன்பாட்டிலேயே இல்லாத சரிபார்க்கப் படாத ஒரு டிவிட்டர் கணக்கிலிருந்து வெளியிடப் பட்ட ஒரு 'போலியான கருத்தின்' அடிப்படையில் தான் ராஜ்நாத் சிங், ஜமாத்–உத் தவா தீவிரவாத அமைப்போடு ஜேஎன்யு மாணவர்களை தொடர்பு படுத்தியுள்ளார் என்று தெரியவருகிறது. ஜேஎன்யு மாணவர்கள் மீது தவறான வழக்கைப் பதியச்செய்ய ராஜ்நாத் சிங் முயற்சிப்பது, அவரது தலைமையிலான மாநகர காவல்துறையினர் நீதிமன்ற வளாகத்திற் குள்ளேயே மாணவர்களைத் தாக்கிய "தேசியவாத" வழக்கறிஞர்கள் மற்றும் அவரது கட்சி எம்எல்ஏவை கைது செய்ய மறுப்பது ஆகியவற்றைக் குறிப்பிட்ட ஒரு கட்டுரையாளர் இந்த சம்பவங்கள் எல்லாம் எப்படி இந்திரா காந்தி தனது எல்லா கஷ்டங் களுக்குப் பின்னாலும் 'அந்நிய கரங்கள்' இருப்பதாகக் குற்றஞ்சாட்டி அவசர நிலையைப் பிரகடனப் படுத்தினார் என்பதை நினைவு படுத்துவதாகக் கூறியுள்ளார்.

கன்னையா மற்றும் மற்றவர்கள் மீது பொய் வழக்கை பதிய முடியாததால் டில்லி போலீஸ் கமிசனர் பி எஸ் பஸ்ஸி, ஆளும் பாஜகவுக்கு ஊதுகுழலாக செயல்படுவதாக ஏற்கனவே பொது மக்களின் கடுமையான விமர்சனத்திற்கு ஆளானார். இதன்பிறகு அவர், குற்றம் சாட்டப்பட்ட மாணவர் கள்தான் தாங்கள் நிரபராதிகள் என்று நிரூபிக்க வேண்டும் என்று கூறுகிறார். இது கேலிக்கூத்தின் உச்சம்! சட்டத்தின்படி குற்றவாளி என்று நிரூபிக்க வேண்டியது குற்றம் சாட்டியவர்களின் பொறுப் பாகும், அதை விடுத்து, குற்றம் சாட்டப்பட்டவர் தான் தான் நிரபராதி என்று நிரூபிக்க வேண்டும் என்று அரசு தரப்பு கூறுவது ஷரத்து 21 (உயிருக்கான பாதுகாப்பு மற்றும் தனிநபர் சுதந்திரம்) வழங்கியுள்ள அடிப்படை உரிமையையே மீறுவதாகும். டில்லி போலீசின் இந்த அப்பட்டமான, திட்டமிட்ட செயலின்மையானது இந்தியாவில் காவல்துறை எப்படி, யார் ஆட்சியில் இருந்தாலும் அவர்களுக்கு அடிவருடி சேவகம் செய்கிறது, என்றும் அதற்காக அது கடமையையும் சட்டத்தையும் மீறுகிறது என்பதையும் மீண்டும் காண்பிக்கிறது.

### மனசாட்சியுள்ள அறிவுஜீவிகள் ஆற்றிய போற்றத்தக்க பங்கு

தாத்ரி கொலை, பகுத்தறிவுவாதிகள் கொலை, பெருகிவரும் சகிப்பின்மை, கல்வி நிலைய தன்னாட்சி மீறப்படுதல், அரசாங்க அதிகாரத்தில் இருப்பவர் களே மதவாத–அடிப்படைவாத கருத்துக்களைப் பரப்புதல் அதோடு ரோஹித் தற்கொலை போன்ற ஜனநாயக மற்றும் மனிதகுலத்தின் மீதான ஒவ்வொரு தாக்குதல்களுக்கும் தங்களது கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்வதற்காக துணிச்சலாக தங்களது விருதுகளைக்கூட திருப்பி அளித்து கண்டனத்தைப் பதிவுசெய்த மனசாட்சியுள்ள அறிவுஜீவிகள் ஜேஎன்யு சம்பவத்திலும் அமைதியாக இல்லை என்பது மனதிற்குத் தெம்பூட்டியுள்ளது.

ஏராளமான எண்ணிக்கையிலான ஆசிரியர்கள், கல்வியாளர்கள், அறிவுஜீவிகள், விஞ்ஞானிகள், வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்கள், சினிமா மற்றும் நாடக கலைஞர்கள் மற்றும் மாணவ சமுதாயத்தினர் பாஜக அரசாங்கத்தையும் அதன் அமைச்சர்களையும் போலீசாரின் நடவடிக்கை யையும் கடுமையாகக் கண்டித்துள்ளதோடு கன்னையாவையும் மற்றவர்களையும் உடனடியாக நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் மீதான பொய் குற்றச்சாட்டுகளை திரும்பப்பெறவேண்டும் என்றும் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்காக பாரபட்ச மற்ற விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இது மிகவும் பாராட்டுக்குரியதாகும். பகுத்தறிவு சிந்தனையையும் ஒழுக்கநெறி முதுகெலும்பையும் முறிப்பதற்காக ஆளும் வர்க்கமும் அதன் அடிவருடி சேவகர்களும் என்னதான் முயற்சித்தபோதிலும் மனித அறிவையும் மனித சாராம்சத்தையும் அவர்களால் கொல்லமுடிய வில்லை என்ற உண்மையை அது நமக்கு நினைவூட்டியுள்ளது.

நாட்டின் மனசாட்சி செத்துவிடவில்லை. இதுதான் நாட்டிற்கு நம்பிக்கை தருவதாகும். சர்வதேச அளவில் புகழ்பெற்ற நோம் சோம்ஸ்கி உள்ளிட்ட அறிவு ஜீவிகள்கூட தாங்கள் வெளியிட்ட அறிக்கையின் மூலம் இதை 'அதிகார வர்க்க அவலத்தின் குணம்' என்று கண்டித்துள்ளனர். அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: 'இந்திய காலனியாதிக்க ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்ட தேசதுரோக சட்டங்களைவைத்து ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழக வளாகத்தினுள் நுழையுமாறு காவல்துறையை ஏவிவிட்டு, மாணவர் தலைவர் திரு கன்னையா குமாரை, அவர்மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்கு எவ்வித ஆதாரத்தையும் காட்டாமல், சட்ட விரோதமாக கைதுசெய்யும் அவமானகரமான செயலை இந்திய அரசாங்கம் செய்துள்ளதாக

தொடர்ச்சி 3ம் பக்கம்

## ஜே என் யு சம்பவம்

# சிந்திக்கும் எந்த ஒருவரும் தேசவிரோத, பிரிவினைவாத கோஷத்தையும் கருத்தையும் ஆதரிப்பதில்லை

2ம் பக்கத் தொடர்ச்சி

நாங்கள் அறிகிறோம்.' அந்த அறிக்கை மோடி அரசாங்கத்தின் கொள்கைகளையும் விமர்சித்துள்ளதோடு கன்னையா குமாரின் கைதிற்கான ஆதாரம் குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளது.

### எதிர்ப்பை முடக்குவது – ஜனநாயகத்திற்கு எதிரானதாகும்

ஐபிசி – ன் *124* ஏ என்ற பிரிவு நாம் காலனி நாடாக இருந்தபோது, எதிர்ப்பைக் காட்டும் எவ்வித உரிமையையும் மறுப்பதற்காக கொண்டுவரப் பட்டது. எனவே அந்த சட்டத்தை நியாயமான, சுதந்திரமான, ஜனநாயக நாட்டில் ஒரு வாதத்திற்காக ஒருவேளை யாராவது 'தேச விரோத' முழக்கத்தை எழுப்பிவிட்டதாக வைத்துக் கொண்டால்கூட இந்த சட்டத்தை பயன்படுத்தலாமா என்ற கேள்வியும் பலரால் எழுப்பப்பட்டுள்ளது. பூர்ஷ்வா பாராளு மன்ற ஜனநாயகத்தை உருவாக்கிய தந்தைகளில் ஒருவரான ஜான் ஸ்டுவர்ட் மில் தனது புகழ்பெற்ற தத்துவார்த்த புத்தகமான 'ஆன் லிபர்ட்டி' சுதந்திர மான பேச்சு எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு அடிப்படைக் கோட்பாட்டை வகுத்து கூறியிருப்பதாவது : 'இந்த பாடத்தின் வாதங்களுக்கு ஏதாவது சரித்தன்மை இருக்குமானால், எந்தவொரு கருத்தையும், அது எவ்வளவு ஒழுக்கநெறி அற்றதாக கருதப் பட்டாலும்கூட, அறநெறி பற்றின் காரணத்தினால் ஒருவர், பேசுவதற்கும் விவாதிப்பதற்கும் முழு சுதந்திரம் இருக்க வேண்டும். ஒரு நபருக்கு மட்டும் அதிகாரம் இருந்து அவர் ஒட்டுமொத்த மனித குலத்தையும் மௌனமாக்குவதை எவ்வாறு நியாயப் படுத்தமுடியாதோ அவ்வாறே ஒருவரைத் தவிர ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் ஒரு கருத்து இருந்து, அதில் ஒருவருக்கு மட்டும் மாறுபட்ட கருத்து இருக்குமானால், அவரது கருத்தை மௌனமாக்குவதை மனிதகுலம் நியாயப்படுத்தமுடியாது.' ஆனால் தற்போதைய ஆட்சியாளர்கள் ஜனநாயகத்தின் இந்த அடிப்படை வழிகாட்டு நெறிமுறைக் கருத்தை மதிப்பதற்கு மனமேயில்லை. தற்போதைய அரசாங்கத்தின் இந்த அப்பட்டமான ஜனநாயகத்திற்கு விரோதமான நடவடிக்கையானது, 'தற்போதைய ஜேஎன்யு சம்பவம்' உள்ளிட்ட இதர பிரச்சினைகளில் 'கருத்து வேறுபாடு' உள்ளது என்று சுட்டிக்காட்டி ஜேஎன்யு மாணவர் பேரவையின் தேர்ந்தெடுக்கப் பட்ட அலுவலக பொறுப்பாளர்களாகவும் ஏபிவிபியின் தலைவர்களாகவும் உள்ள அந்த மூன்று பேர் ஏபிவிபியிலிருந்து விலகுவதாக அறிவித்தனர். "மாணவர் சமுதாயத்தின் மீது அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டமைக்காக" மத்திய அரசை விமர்சித்துள்ள அவர்கள் "இத்தகைய அரசாங்கத்தின் ஊதுகுழலாக" தங்களால் இருக்க முடியாது என்று தெரிவித்துள்ளனர்.

### 'தேச பக்த உணர்வு' என்ற பெயரில் எழுப்பப்படும் தேசிய வெறிவாதம்

நிலையான புத்தியுள்ள எந்தவொருநபரும் எந்தவித தேசவிரோத மற்றும் பிரிவினைவாத, பிளவுவாத கோஷத்தையோ கருத்தையோ ஆதரிக்க மாட்டார் என்பது சொல்லாமலே விளங்கும். நாட்டைபிளவுபடுத்த முயற்சிப்பது கடுமையாகக் கண்டிக்கத்தக்கது. ஏனெனில் அது ஒடுக்கப்படும் மக்களின் ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் சிதைப்பதோடு மட்டுமல்லாமல் ஆளும் முதலாளித் துவத்திற்கு எதிரான தேவையான விழிப்புணர்வு பெற்ற மக்கள் இயக்கத்தை பலவீனப்படுத்திவிடும்.

இந்த மண்ணின் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியான எமது கட்சி எல்லாவிதமான பிளவுவாத– பிரிவினைவாத சக்திகளை, போக்கை கடுமையாக எதிர்க்கிறது. ஆனால் அதே நேரத்தில், மக்களுடைய தேசபக்தி உணர்வை பயன்படுத்திக்கொண்டு, அவர்களது எண்ணங்களை தடுக்கும்வகையில், உண்மையான பிரச்சினைகளிலிருந்து கவனத்தை திசைதிருப்பும் வகையில் அவர்களை குருட்டுத் தனமான பிற்போக்கு சக்திகளின் பின்னால் அவர்கள் அணிவகுத்து செல்லக்கக்கூடிய போலி தேசியவாதம் அல்லது தேச உணர்வை மையப் படுத்தி எழுப்பப்படும் கட்டுப்பாடற்ற வெறி யுணர்வை தூண்டக்கூடிய எந்த ஒருசக்தியின் முயற்சியையும் நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

தாங்கள்தான் தேசியவாதத்தின் உண்மையான காவலர்கள் என்று கூறும் பாஜக தலைவர்கள் ஜிகாதிகளிடமிருந்து கடுமையான சவால்களை தாங்கள் எதிர்நோக்கியுள்ளதாக கூறுகின்றனர். ஆனால் வரலாற்றின் பக்கங்களை ஒருவர் புரட்டிப் பார்த்தால் இந்திய தேசியவாதத்திற்காக ஆர்எஸ்எஸ்– பாஜக ஒருபோதும் போராடியதில்லை என்பது தெளிவாகும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சுதந்திரத்திற்கான இந்திய மக்களின் போராட்டத்தை அவர்கள் எதிர்த்தனர், சொல்லப்போனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுக்கும் தங்களுக்கும் பொதுவான நலன் இருப்பதாகக்கூட கூறினர்.

நூற்றுக்கணக்கான தேசபக்தி இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் சுதந்திரப்போராட்ட வீரர்கள் சிறை சென்றபோது, தூக்குமேடையை முத்தமிட்டு தங்களது இன்னுயிர்களைத் தியாகம் செய்தபோது இந்து மகாசபையின் அப்போதைய தலைவரும் 'இந்து ராஷ்டிரத்தை' முன்மொழிந்தவர்களில் ஒருவரும், ஆர்எஸ்எஸ் ஸ்தாபகர்களில் ஒருவரு மான வி டி சவார்க்கர் 1939இல் பிரிட்டிஷ் ஆட்சி யாளர்களுடன் ஒத்துழைப்பு நல்குவதாக அப்போதைய பிரிட்டிஷ் வைசிராயான லின்லித் கோவிற்கு பத்திரத்தில் உறுதிமொழி எழுதிக் கொடுத்துவிட்டு சிறையிலிருந்து விடுதலையானார். அதற்கு மகிழ்ச்சியோடு பதிலளித்த லின்லித்கோவ் "நமது நலன்கள் ஒன்றாக உள்ளன, நாம் ஒன்றாக செயல்படவேண்டும். தற்போது அவர் மாறிவிட்ட மனிதராக இருந்த போதிலும் முன்பு அவர் புரட்சிகர கட்சியை ஆதரித்தவராக இருந்தார்... ஆனால் தற்போது நமது நலன்கள் மிகவும் நெருக்கமாக இருப்பதால் இந்துவாதமும் பிரிட்டனும் நண்பர்களாக இருக்க வேண்டியுள்ளது, எனவே நமது பழைய பகைமை உணர்வுக்கு இனி அவசியம் இல்லை.'(ஏஜி நூராணி அவர்கள் எழுதிய கட்டுரை, இந்துஸ்தான் டைம்ஸ், மார்ச் *2003*)

தங்களது நிலைப்பாட்டையும் சித்தாந்தத்தையும் தெளிவாக விளக்கும் வண்ணம் ஆர்எஸ்எஸ் முன்னணி சித்தாந்தவாதி எம் எஸ் கோல்வால்க்கர் எழுதியிருப்பதாவது; 'தேசம் பற்றிய நமது கருத்துக்கு அடிப்படையாக விளங்கும் புவியியல் ரீதியான தேசியவாதம் மற்றும் பொது அபாயம் பற்றிய கருத்தியல்கள் நமது உண்மையான இந்து தேசம் பற்றிய நேர்மறையான மற்றும் உத்வேகமூட்டும் கருத்துகள் எழவிடாமல் செய்பவையாகவும் பல 'சுதந்திர இயக்கங்கள்' ஒருவாராக பிரிட்டிஷாருக்கு எதிரானவைகளாகவும் ஆக்கிவிட்டன. பிரிட்டிஷ் –எதிர்ப்பு என்பது தேசபக்தி மற்றும் தேசியவாதத் தோடு ஒப்பிடப்பட்டுவிட்டது. இந்த சந்தர்ப்பவாத பார்வை ஒட்டுமொத்த சுதந்திரப்போராட்டத்தின் போக்கையும், அதன் தலைவர்கள் மற்றும் சாமானிய மக்கள் மீது பேரழிவு விளைவுகளை உருவாக்கி விட்டது.' (நாம் அல்லது நமது தேசியம்).

ஆர்எஸ்எஸ் – இந்து மகா சபா ஆகியவை தேசிய சுதந்திரப் போராட்டத்திற்கு துரோகம் இழைத்த தற்கும், முஸ்லீம் எதிர்ப்பு, முஸ்லீம் வெறுப் புணர்வுப் பிரச்சாரத்தையே தங்களது ஒரே அரசியலாகக் கொண்டிருப்பதற்கும் பல உதாரணங்கள் உள்ளன.

அதே இந்துத்துவ கோட்பாட்டைப் பின்பற்றும் இன்றைய ஆர்எஸ்எஸ்–பாஜக–சங்பரிவார் அமைப்பினர் தங்களை தாங்களே தேசபக்தர்களாக அழைத்துக்கொண்டு மக்களுக்கு தேசபக்தியை போதிப்பதற்கு என்ன தார்மீக உரிமை இருக்கிறது?

தேசவிரோத முழக்கங்களை எழுப்பியவர்கள் யார்? உள்ளேயிருந்தவர்களா இல்லை பிரச்சினையை உருவாக்குவதற்காக உள்ளே நுழைந்த வெளியாட் களா? இதுபற்றியெல்லாம் எவ்வித பாரபட்சமற்ற விசாரணையும் நடத்தாமலேயே ஜனநாயக நடை முறைகள் அனைத்தையும் காற்றில் பறக்கவிட்டு, "ஜேஎன்யு மாணவர்கள் தேச–விரோதிகள்" "ஜேஎன்யு வை மூடு", "வரி செலுத்துவோரின் பணம் தேசதுரோகத்திற்குப் பயன்படுத்தப் படுகிறது" என்று ஆர்எஸ்எஸ்–பாஜக–ஏபிவிபி அபாயக்குரல் எழுப்பி வருகின்றன. வரிசெலுத்து வோரின் பணத்தின் நிதி உதவியோடு பல்கலைக் கழகங்கள் இயங்குவதால் படிப்பில் மட்டும் கவனம் செலுத்துவதே மாணவர்களது கடமை என்றும் அவர்கள் எவ்வித சமூக அரசியல் இயக்கங்களிலும் பங்கேற்கக்கூடாது என்றும் கூறுகின்றனர்.

இந்த வாதத்தை மறுதலிக்கும் விதமாக, ஆர்எஸ்எஸ்–பாஜக பின்பற்றுவதாகக் கூறும் விவேகானந்தரின் வார்த்தைகளில் பார்ப்போம். விவேகானந்தர் கூறுகிறார், "லட்சக்கணக்கான ஏழை உழைக்கும் மக்களின் இதய ரத்தத்தின் பலனால் கல்விகற்று வசதிகளை அடைந்த ஒருவன், அதன் பின்னர் அவர்களைப் பற்றி கிஞ்சித்தும் நினைத்து கூடப் பார்க்கவில்லை எனில் அவனை நான் துரோகி என்று அழைப்பேன்".



ஜேஎன்யு சம்பவத்தை கண்டித்து ஆறு இடதுசாரி கட்சிகளின் ஒன்றுபட்ட இயக்கத்தின் ஒரு பகுதியாக 23.2.2016 அன்று சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் ரெங்கசாமி உரையாற்றுகிறார்

ஆக தேசதுரோகிக்கும் தேசப்பக்தருக்குமான தெளிவான வேறுபாட்டை விவேகானந்தர் கொடுத்துள்ளார். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் குறித்த ரகசிய ஆவணங்களை வெளியிடுவதை மையமாக வைத்து பாஜக தலைவர்கள் நேதாஜி மீது திடீர் பாசம் கொண்டுள்ளனர். நேதாஜி கூறுவது என்னவெனில், "நாட்டின் தற்போதைய சூழ்நிலை மையைப் பற்றிப் பேசுவது அரசியல் என்றால், தாய்நாட்டை முன்னேற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொள்வது அரசியலென்று முத்திரை குத்தப்பட்டால், பின் மாணவர்களுக்கோ அல்லது ஆசிரியர்களுக்கோ அரசியலில் சேருவதைத் தவிர வேறு வழி இல்லை." என்பது தான்

### இந்நடவடிக்கையின் பின்னணியில் உள்ள நோக்கம்

நாம் நமது நாட்டைப் பற்றி, தேசத்தைப் பற்றிப் பேசும்போது பெருவாரியான சாமானிய உழைக்கும் மக்களைப் பற்றிப் பேசுகிறோம். எனவே, நாட்டு நலன் என்பது அல்லது உண்மையான தேச நலன் என்பது சாமானிய மக்களின் நலன்களுக்கு சேவை செய்வதில்தான் அடங்கியுள்ளது. தங்களது குறுகிய பிளவுவாத அரசியல் நலனுக்காகவும் பணம், பதவிக் காகவும் முதலாளித்துவ இந்தியாவின் ஆளும் ஏகபோகங்களின் மொத்த வர்க்க நலன்களுக்கு அடிவருடி அப்பட்டமாக சேவகம் செய்பவர் களுக்கும், உள்நாட்டு, வெளிநாட்டு ஏகபோக முதலாளிகள் இந்த நாட்டை தங்கு தடையில்லாமல் கொள்ளையடிப்பதற்கும் சுபளீகரம் செய்வதற்கும் அனுமதிப்பவர்கள், தீர்க்கமுடியாத கடுமையான சந்தை நெருக்கடியில் சிக்கியிருக்கும் முதலாளித் துவத்தின் சுமைகளை, பொருளாதாரச் சீர்திருத்தம் மற்றும் கடன் இழப்பீட்டை ஏற்கனவே வறுமையில் இருக்கும் சாமானிய ஏழை மக்கள் மீது சுமத்து பவர்கள், கடுமையாகப் போராடிப் பெற்ற மக்களின் அனைத்து ஜனநாயக உரிமைகளையும் திட்டமிட்டு பறிப்பவர்கள், மத ஆதிக்கவாதம், மத வெறிவாதம் மற்றும் குருட்டுத்தனம் ஆகியவற்றின் கலவைகளாக மக்களைத் தள்ளுவதற்காகவோ அல்லது அவர்களது எண்ணங்களில் ஆழமாக அழுகிப்போன வக்கிரமான ஏகாதிபத்திய சிந்தனைகளை ஊக்குவிப்பதற்காகவோ சமூக–கலாச்சார நற்சூழலை பாழ்படுத்துபவர்கள், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதலபாதாளத்திற்கு சென்றபோதிலும் அதன் பலனை பெரும்பான்மை மக்களுக்குக் கிடைக்க விடாமல் வரியை ஏற்றுபவர்கள், தங்களது எதிர்கால வாழ்விற்காக வாயை–வயிற்றைக் கட்டி சாமானிய

தொடர்ச்சி 4ம் பக்கம்

## ஜே என் யு சம்பவம்

# பிற்போக்கு பூர்ஷ்வா அரசியலுக்கு மாற்றாக உண்மையான இடதுசாரி போராட்டப் பாதையை முன்நிறுத்துவதே இத்தருணத்தின் தேவையாகும்

3ம் பக்கத் தொடர்ச்சி

மக்கள் சேமித்த பி எஃப், மற்றும் சேமிப்பு தொகைகளுக்கு வட்டியைக் குறைத்து அதன்மூலம் அவர்களது நியாயமான சேமிப்பு வருவாயை அபகரிப்பவர்கள், பெரும் ஏகபோக நிறுவனங்களுக்கு பல ஆயிரம் கோடிகள் வரிச் சலுகை அளிப்பதோடு, அவர்கள் வங்கிகளில் வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்தாதபோதும், அவர்களை வசதியாக நாட்டைவிட்டு தப்பிக்க அனுமதிப்பவர்கள், சாமானிய மக்களின் கல்வியை பறிக்கும் விதமாக கல்வியை முற்றிலும் தனியார் மயமாக்குபவர்கள், ஒருபுறம் மக்களின் சேமிப்பின் மீது கைவைத்துவிட்டு ரயில்வே கட்டணத்தையும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளையும் தொடர்ந்து அதிகரித்து மக்களின் வாழ்க்கையை சூறையாடுபவர்கள், லஞ்ச லாவண்யத்தில் சிக்கியிருப்பவர்களோடு தேர்தலுக்காக எப்படியாவது உடன்பாடு வைத்துக்கொள்ள எத்தனிப்பவர்கள், எல்லாவற்றிற்கும் மேலாக வாழ்க்கையின் அனைத்து மட்டங்களிலும் ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கி வருபவர்கள், – இவர்களுக்குப் பெயர் தேசபக்தர்களா, இவர்களா தேசியவாதிகள்?

ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதரவோடு ஆர்எஸ்எஸ்–பாஜக–ஏபிவிபியினர் எழுப்ப முயற்சித்துவருவது தேசியவாதமோ தேசபக்தியோ அல்ல அது தேச வெறிவாதம். தாய்நாட்டின் மீது மக்களிடமிருக்கும் தேசபக்தி உணர்வைப் பயன்படுத்திக்கொள்ளும் யுக்தியைச் சந்தர்ப்பவாத பிற்போக்கு பாசிஸ்டுகள் மேற்கொள்கின்றனர். அதன்பின்னர் நாட்டின் ஒருமைப்பாட்டைக் காக்கிறோம், அன்னிய ஊடுருவலை தடுக்கிறோம் என்ற பெயரில் சர்வாதிகார அரசின் கீழ் அனைத்து அதிகாரங்களையும் குவித்து நிலைநிறுத்துகின்றனர். அதிகாரக் குவிதல் நடக்கும்போது, பாசிசத்தின் கோரப்பற்களும் தாடையும் உருவாகி உருப்பெற்றுவிடும் அதன்பின்னர் அதீத களிப்போடு உக்கிரமான ஈவிரக்கமற்ற அடக்குமுறை ஏவப்படும். இதுதான் ஆளும் ஏகபோகங்களின் நீண்ட நாள் இலக்காக இருந்துவருகிறது, அதை பாஜக மற்றும் காங்கிரஸ் மூலமாக செயல்படுத்த அவர்கள் முயற்சிக்கின்றனர்.




ஜேஎன்யு சம்பவத்தை கண்டித்து ஆறு இடதுசாரி கட்சிகளின் ஒன்றுபட்ட இயக்கத்தின் ஒரு பகுதியாக பாட்னாவில் நடந்த ஆர்ப்பாட்டம்.

### தேசியவாதம் என்ற மாயையை பாஜக உருவாக்கக் காரணம்

தேசியவாதம் இக்கட்சியின் ஒரு நீண்டகாலத் திட்டமாக இருந்தாலும், தற்போது அதை பாஜக எழுப்புவதற்கு உடனடி அரசியல் தேவையும் இருக்கிறது. நல்ல காலத்தைக் கொண்டு வருவோம் என்று உறுதியளித்து பாஜக ஆட்சிக்கு வந்தது. விலைவாசியைக் குறைப்பது, கோடிக்கணக்கான வேலையில்லாதவர்களுக்கு வேலை வழங்குவது, ஊழலை ஒழிப்பது, கறுப்புப் பணத்தை வெளிக் கொண்டுவந்து அதிலிருந்து நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் ரூ15 லட்சத்தைப் பகிர்ந்தளிப்பது, பெண்களின் பாதுகாப்பையும் கண்ணியத்தையும் பாதுகாப்பது, விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு உரிய விலை அளிப்பது, மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறப்பது அதோடு முழு வீச்சில் தொழில்மயமாக்கலை கொண்டுவருவது போன்ற விஷயங்கள் அதில் அடங்கியிருந்தன. ஆனால் இவை எல்லாம் வெற்று ஏமாற்று வார்த்தைகள் என்பது வெறும் ஒன்றரை ஆண்டுகளிலேயே தெரிந்துவிட்டது.

பொருளாதாரம் சுணக்கத்தின் பிடியில் சிக்கியிருக்கிறது, பணவீக்கம் குறிப்பாக உணவுப் பணவீக்கம் அதிகரித்து வருகிறது, உற்பத்தித் தொழிற்சாலைகள் வீழ்ச்சியில் உள்ளன, வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவருகிறது, ஆலைமூடல்கள் அதிகரித்துவருகின்றன, அரசாங்க நிர்வாகத்தின் அனைத்துக் களங்களிலும் ஊழல் கரைபுரண்டோடுகிறது, கள்ளச் சந்தை, பதுக்கல் மற்றும் முறைகேடாக விலை ஏற்றுதல் போன்றவை சில்லறை வணிகத்தை ஆதிக்கம் செலுத்துகின்றன, சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சியின் பலன் சாமானிய மக்களுக்குக் கிட்டவில்லை, கறுப்புப் பணம் தொடர்ந்து உருவாகி அதிகரித்து வருகிறது, விவசாயிகளின் தற்கொலைகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. பெண்கள் மீதான குற்றங்கள் எச்சரிக்கும் வீதத்தில் அதிகரித்துவருகின்றன, பிச்சைக்காக கையேந்துபவர்கள் அதிகரித்துள்ளனர், பட்டினி மற்றும் வறுமைச் சாவுகள் ஒவ்வொரு நாளும் புதிய உச்சத்தைத் தொட்டு வருகின்றன. டிஜிடல் இந்தியா என்று நகர்புற இளைஞர்களுக்கு அளித்த வாக்குறுதியும் கைகழுவப்பட்டுவிட்டது. அதிகரித்து வரும் வறுமை, தரித்திரம், மக்களின் அவலநிலை காங்கிரஸ் ஆட்சிக்கும் பாஜக ஆட்சிக்கும் இடையே எவ்வித வேறுபாடும் இல்லை என்பதைக் காட்டிவிட்டன. டில்லி மற்றும் பீஹார் சட்டசபைத் தேர்தல்களில் பாஜக சந்தித்த படுதோல்வி அவர்களது மோசமான ஆட்சிமீது மக்களுக்கு இருக்கும் கோபத்தை வெளிக்காட்டிவிட்டது. குஜராத்தில் நடைபெற்ற மோசமான கலவரத்தின் சிற்பியாக இதுவரை கருதப்பட்ட மோடியை 'வளர்ச்சியின் உருவகம்' என்றும் நாட்டைப் பாதுகாக்கும் ரட்சகர் என்றும் முன்னிறுத்திய பிரதான முதலாளித்துவ ஊடகங்கள் தற்போது ஒவ்வொரு அம்சத்திலும் அவரது தோல்வியையும் மக்களை அவர் ஏமாற்றுவதையும் எழுதும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஊடகங்கள் மோடியை ஆதரித்தது தாம் எறிந்த பந்து தம்மீதே திரும்பத் தாக்கியதுபோல் ஆகிவிட்டது

### உண்மையான திட்டம்

ஆக, மக்களின் கவனத்தை திசைதிருப்புவதற்காக ஆர்எஸ்எஸ்–பாஜக தலைமை பல்வேறு தந்திரங்களைக் கையாண்டு வருகின்றன. முதலில் அவர்கள் 'கர் வாப்சி', 'காதல் ஜிகாத்திலிருந்து' காத்தல் போன்ற மதமாற்ற நிகழ்ச்சிகளை மையப்படுத்தி வெறியுணர்வைத் தூண்டுவதன் மூலமாக மதப் பிளவை ஊதிப் பெரிதாக்க முயன்றனர். அதனைத் தொடர்ந்து உத்திரபிரதேசத்தில் தாத்ரியில் பட்டப்பகலில் அப்பாவி அக்லாகையும், அதனைத் தொடர்ந்து பல பகுத்தறிவுவாதிகளையும் கொன்றனர், அதோடு மதரீதியான–தத்துவார்த்த சகிப்பின்மையை பரப்பினர். பண்டைய இந்தியாவில் அனைத்து நவீன அறிவியலும் இருந்ததாகக் கட்டுக்கதைகளை கட்டவிழ்த்துவிட்டு 'இந்தியமய' உணர்வைத் தூண்டுவதற்கு முயற்சித்தனர். ஆனால் எல்லாமே அவர்களுக்கு எதிராகப் போய்விட்டது, அதோடு அறிவுஜீவிகள் உள்ளிட்ட சரியாக சிந்திக்கும் மக்களின் கோபத்திற்கு ஆளாகிவிட்டனர். 'காவிக்கும் தலித்துகளுக்குமிடையிலான மோதல்' என்று ஏபிவிபியை வைத்து ஹைதராபாத்தில் செய்த முயற்சியும் எதிர்விளைவை ஏற்படுத்திவிட்டது. எனவே 'தேசியவாத' கிளர்ச்சி வெறியினை 'தேச விரோதிகள்' என்று நேரடியாக குறிப்பிடாமல் மறைமுகமாகக் குறிப்பிட்டு அதன் மூலம் படிப்படியாக போலி தேசியவாதத்தை கொண்டுவரும் ஆர்எஸ்எஸ்–பாஜக–ஏபிவிபி திட்டத்தை கொண்டு வந்தனர். எனவே ஜேஎன்யு மீது குறிவைக்கப்பட்டது.

தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் சம்பவங்களை ஒருவர் கவனமாகப் பார்த்தால், இத்தகைய நிகழ்ச்சிக்காக ஆர்எஸ்எஸ்–பாஜகவும் அதன் அடிவருடிகளும் தயாராக இருந்ததுபோல் தெரிகிறது. ஆர்எஸ்எஸ்–பாஜகவின் பாதையை ஏற்றுக் கொள்ளாத நாத்திகவாதிகளையும்– கம்யூனிஸ்டுகளையும் அப்பாவி மாணவர்களையும் 'தேச விரோத' சக்திகள் என்றும் நாட்டைப் பிளப்பதற்கு சதி செய்யும் தீவிரவாதிகள் என்றும் முத்திரை குத்தும் விஷமப் பிரச்சாரத்தை செய்தனர். இதன் மூலம்தான் அப்பட்டமான இந்துத்துவா மற்றும் இந்தியர்கள் என்று அவர்களாகவே அழைத்துக்கொள்ளும், தாங்கள்தான் தேசியவாதம் மற்றும் தேச ஒற்றுமையின் உண்மையான காவலர்கள் என்று பொய் பரப்புரையை மேற்கொள்ள முடியும் என்று நினைப்பது தெரியவருகிறது.

தேசிய வெறியுணர்வை தூண்டிவிடும் அதே வேளையில் ஆர்எஸ்எஸ்–பாஜகவினர் தங்களது பாசிச முகத்திற்கு உண்மையான இடதுசாரிகளிடமிருந்துதான் கடுமையான எதிர்ப்பு கிளம்பும் என்பதால் அந்த சித்தாந்த பயத்தின் காரணமான தங்களது வாளை இடதுசாரிகளுக்கு எதிராகத் திருப்பியுள்ளது. கம்யூனிஸ்டுகள் ஜெர்மனியில் ரெய்ச்ஸ்டாக் (ஜெர்மன் பாராளுமன்ற கட்டிடம்) கட்டிடத்தைக் கொளுத்திவிட்டனர் என்ற புரளியைக் கிளப்பிவிட்டு அவர்களை ஹிட்லர் எப்படி நசுக்கினார் என்பதை இந்தச் சம்பவம் நினைவூட்டுகிறது.




ஜேஎன்யு மாணவர் தலைவர் கன்னையா குமார் கைது செய்யப்பட்டதை கண்டித்து இடதுசாரி மாணவர் மற்றும் இளைஞர் அமைப்புகள் பிப்ரவரி 25, 2016 அன்று மதுரையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.

### சூழ்நிலையைத் தங்களுக்கு சாதகமாக்கிக்கொள்ள காங்கிரஸ் முயற்சி

இதுதொடர்பாக, ஆளும் முதலாளித்துவவாதிகளின் நம்பிக்கைக்குரிய பிரதிநிதியும் தனது முதலாளித்துவ–ஆதரவு மக்கள்–விரோத கொள்கைகளாலும் கழுத்து மூழ்க செய்த ஊழல்களாலும் மக்களால் தூக்கியெறியப்பட்ட காங்கிரசைப் பற்றி கூறியாகவேண்டும். பூர்ஷ்வா அதிகார அரசியலில் தனது பிரதான எதிரியான பாஜக சிக்கலில் மாட்டிக் கொண்டவுடன், ஜனநாயகம் என்று பேசிக்கொண்டு தற்போது காங்கிரஸ் களத்தில் குதித்துள்ளது. ஆனால் ஜனநாயகத்தை எப்படி யெல்லாம் காங்கிரஸ் காத்தது என்பதை, அவசர நிலையைப் பிரகடனப்படுத்தியது முதல், மேற்கு வங்க தேர்தலில் 1972இல் செய்த முறைகேடுகள், மிசா, பொடா, ஆயுதப்படை சிறப்பு பாதுகாப்பு சட்டம் போன்ற பல கறுப்புச் சட்டங்களை ஒன்றன் பின் ஒன்றாகக் கொண்டுவந்ததிலிருந்து தெரிந்து கொள்ளலாம். காங்கிரஸ் அல்லாத மாநில அரசாங்கங்களை 356வது பிரிவைப் பயன்படுத்திக் கலைத்தது, சட்டசபை எம்எல்ஏக்களை எம்பிக்களை விலைக்கு வாங்கி நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றது வரை என பல்வேறு

தொடர்ச்சி 6ம் பக்கம்

# எண்ணெய் விலை வீழ்ச்சியின் பலன்களை சாமானிய மக்களுக்கு அளிக்க மறுக்கும் பாஜக அரசாங்கம்

முன்பு, பெட்ரோல்–டீசல் சில்லறை விற்பனை விலையை அரசாங்கம் உயர்த்தும் போதெல்லாம், சர்வதேச கச்சா எண்ணெய் விலை உயர்வால் எண்ணெய் நிறுவனங்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்டுவதற்கு இவ்விலை உயர்வு அவசியம் என்று வாதாடுவது வழக்கம். ஆனால் எந்த எண்ணெய் நிறுவனமும் நஷ்டத்தை சந்திக்கவில்லை ஆனால் பெருத்த லாபத்தையே ஈட்டி வருகின்றன என்பதை உகந்த ஆதாரங்களுடன் நாம் ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளோம். ‘லாபத்தில் குறைவு’ ஏற்படுவதை (Under Recovery) இழப்பு என்று கூறி அரசாங்கம் மக்களை முட்டாள்களாக்குகிறது என்பதை பலமுறை எடுத்துரைத்துள்ளோம்.

பின்னர், மக்களின் கருத்துக்களையும் தொடர்ச்சியான நாடுதழுவிய எதிர்ப்பியக்கத்தையும் பொருட்படுத்தாமல், அரசாங்கமே பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில் முதலில் பெட்ரோல், பின்னர் டீசல் விலையையும் நிர்ணயிக்கும் முறையை நீக்கி, அதனை எண்ணெய் நிறுவனங்களிடமே ஒப்படைத்தது. சர்வதேசச் சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சி அடையும்போது அதற்கேற்ப இங்கும் சில்லறை விற்பனையில் விலை குறைக்கப்படும் என்ற வாதத்தையும் முன்வைத்தனர். ஆனால் சர்வதேச கச்சா எண்ணெய் விலை அதலபாதாளத்தில் வீழ்ச்சி அடைந்தும் அதற்கேற்ப விலையைக் குறைப்பதற்கு மாறாக அரசாங்கம் தனது பையை நிரப்புவதற்காகவும் உள்நாட்டு எண்ணெய் நிறுவனங்கள் பெருத்த லாபம் ஈட்டுவதற்காகவும் கூடுதல் வரிவிதித்து சாமானிய மக்களுக்கு சம்மட்டி அடி தருகிறது.

உதாரணத்திற்கு, ஜனவரி 2014இல் கச்சா எண்ணெயின் சர்வதேச விலை 106டாலராக இருந்தபோது புது டில்லியில் பெட்ரோலியப் பொருட்கள், பெட்ரோல் மற்றும் டீசலின் சில்லறை விலைகள் லிட்டருக்கு முறையே ரூ72.43 மற்றும் ரூ54.34 ஆக இருந்தது. தற்போது உலக கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 32 டாலராக உள்ளது, ஆனால் பெட்ரோல் விலை ரூ. 59.99 ஆக உள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால் கச்சா எண்ணெய் விலை 331% வீழ்ச்சி அடைந்துள்ளது, ஆனால் பெட்ரோல் விலை வெறும் 16% மட்டுமே குறைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என்பது நன்கு தெரிகிறது.

ஏப்ரல் 2011இல் கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 110 டாலருக்குமேல் இருந்தபோது, ‘எரிபொருள் பகுதிக்கான’ (Fuel Component) பெட்ரோல் எடுப்பதற்கான விலை லிட்டருக்கு ரூ30.22 என்றும் டீசல் விலை லிட்டருக்கு ரூ 25.11 என்றும் அன்றைய காங்கிரஸ் அரசாங்கம் பாராளுமன்றத்திற்குத் தெரிவித்தது. எரிபொருள் பகுதி என்பது கச்சா எண்ணெய் விலை + பிரித்தெடுக்கும் விலை + மொத்த சுத்திகரிக்கும் விலை அதோடு போக்குவரத்து செலவு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால். 2011இல் ஒரு லிட்டர் பெட்ரோல் உற்பத்தி விலை, லாபத்தையும் சேர்த்து ரூ30.22, அதேபோல் டீசலுக்கு ரூ25.11 ஆகும்.

மே 2014இல் பாஜக ஆட்சிக்கு வந்தது. அந்த ஆண்டு ஜூன் மாதத்தில் கச்சா எண்ணெயின் விலை பேரலுக்கு 115 டாலராக இருந்தது. அப்போது 1 டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 58.44 ஆக இருந்தது, அதாவது 1 டாலர் = ரூ58.44. எனவே ஒரு பேரல் (159 லிட்டர்) கச்சா எண்ணெயின் விலை 6720 ரூபாய் 60 பைசாவாகும். அதன்படி பார்த்தால் அப்போதைய எண்ணெய் விலை ரூ42.26 ஆக இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்போது சந்தையில் பெட்ரோல் லிட்டருக்கு ரூ74.42 ஆகவும் டீசலுக்கு ரூ55.45 ஆகவும் இருந்தது.

இயற்கையாக எழக்கூடிய கேள்வி என்னவெனில், சில்லறை எரிபொருள் விலையின் அதிகப்படியான இந்த சுமையை எதற்காக மக்கள் சுமக்க வேண்டும்? சில்லறை விலையைக் கணக்கிடும் முறையில் இதற்கான விடை அடங்கியுள்ளது, நன்கு அறியப்பட்ட பின்வரும் ஆதாரத்தின் வாயிலாக இதை விளக்குகிறோம்.

கடுமையான வரிவிதிப்பின் மூலமாக சாமானிய மக்களை அரசாங்கம் எப்படிக் கசக்கிப் பிழிகிறது என்பதை இது காட்டுகிறது. சொல்லப்போனால், மத்திய பாஜக அரசாங்கம் வருவாயை மேலும்மேலும் அதிகரிக்கவேண்டும் என்பதற்காக பெட்ரோல் மற்றும் டீசல் மீது கூடுதல் வரி விதிப்பதை தொடர்ந்து வாடிக்கையாகக் கொண்டுள்ளது. 2016ஜனவரியில் மட்டும், பெட்ரோல்–டீசல் மீதான சுங்கவரியை அரசாங்கம் மூன்றுமுறை உயர்த்தியுள்ளது. 16 ஜனவரில், இரண்டாவது முறையாக பெட்ரோல் மீது லிட்டர் ஒன்றுக்கு 75 பைசாவும் டீசல் மீது ரூ2ம் வரி விதிக்கப்பட்டு ரூ3700 கோடி வருவாய் ஈட்டியது. பின்னர் 30 ஜனவரியில் மூன்றாவது முறையாக பெட்ரோல் மீது லிட்டர் ஒன்றுக்கு ரூ1ம் டீசல் மீது லிட்டர் ஒன்றுக்கு ரூ1.50ம் அதிகரிக்கப்பட்டு ரூ3200 கோடி வருவாய் ஈட்டியது.

இப்படி சுங்கவரியை அவ்வப்போது உயர்த்தியதன்மூலம் சர்வதேச அளவில் கச்சா எண்ணெயின் விலை கடந்த 12 ஆண்டுகளில் இல்லாத அளவு வீழ்ந்த பின்னரும் அதன் பலனை நுகர்வோருக்குக் கிடைக்கவிடாமல் செய்துவிட்டனர். இந்த அரசாங்கம் மக்களுக்குக் கடமைப்பட்டிருந்தால், அது எண்ணெய் விலையை குறைத்து போக்குவரத்து செலவை குறைத்திருக்கும், போக்குவரத்து செலவு குறைந்திருந்தால் அது பயறுகள், தானியங்கள், காய்கறிகள், உப்பு, சர்க்கரை, சமையல் எண்ணெய் போன்ற உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலையையும் குறைத்திருக்கும். ஆனால் மக்களுக்கு சுமையை ஏற்றி தனது பையை நிரப்பிக்கொள்ள பாஜக அரசாங்கம் செயல்படுகிறது.

தனது முகத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காக, மத்திய நிதி அமைச்சர் இந்த அதிகரிக்கப்பட்டுள்ள வருவாயானது புதிய சாலைகள் அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் என்று கூறுகிறார். ஆனால் அரசாங்கத்தின் இந்த வாதத்தை நாட்டில் ஒருவர் கூட ஏற்கத்தயாராக இல்லை, ஏனெனில் முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கு அப்பட்டமாக சேவகம் செய்துவரும் இந்த அடிவருடி அரசாங்கம் உரம், பொது விநியோகம், சமையல் எரிவாயு உள்ளிட்ட மக்களுக்குத் தேவையான முக்கியமானவற்றிற்கு மானியத்தைக் குறைத்துவருகிறது என்பதையும் விவசாயம், உணவுக் கட்டுப்பாடு, சுகாதாரம், கிராமப்புற வேலை உருவாக்கும் திட்டங்கள், குழந்தைகளுக்கான கல்வி போன்ற மக்கள் நலத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீட்டைக் குறைத்துவருகிறது என்பதையும் மக்கள் பார்த்து வருகின்றனர். மற்றொருபுறம், ஆளும் ஏகபோகங்கள், பெரும் கார்ப்பொரேட்டுகள் மற்றும் தொழிற்குழுமங்களுக்கு ஏராளமான வரிச் சலுகைகளையும், விலக்குகளையும் வழங்கி அவர்களது பணப்பையை கொழுக்கச் செய்வதில் கொஞ்சமும் அரசாங்கம் தயக்கம் காட்டவில்லை. எனவே முதலாளித்துவ இந்தியாவின் பணப்பையில் சேரும் எந்த பணமும் மக்களின் நலத் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படும் என்று நம்புவது பகல் கனவாகவே இருக்கும்.

ஏற்கெனவே நாம் அம்பலப்படுத்தியதுபோல், கச்சா எண்ணெயின் விலை கடுமையாக சரிந்துள்ளதால் எண்ணெய் சுத்திகரிப்பிற்கு ஆகும் செலவும் பெரிய அளவில் குறைந்துள்ளது. இதனால் எண்ணெய் நிறுவனங்களின் லாபம் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இந்திய ஏகபோகங்களில் 22 பில்லியன் டாலர் சொத்து வைத்துள்ளார் என்று கூறப்படும் முகேஷ் அம்பானிக்கு சொந்தமான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் லாபம் கடந்த 2014 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் அக்டோபர் – டிசம்பர் 2015 காலத்தில் 39% உயர்ந்துள்ளது, அதாவது ரூ7290 கோடி அதிகரித்துள்ளது. ஜனவரி 2016இல் பதினைந்தே நாட்களில் முகேஷ் அம்பானியின் சொத்து 620 மில்லியன் டாலர் அதிகரித்துள்ளது என்பது புளூம்பெர்க் பில்லியனர்ஸ் குறியீடு தெரிவிக்கிறது.

ஆக சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை சரிவால் எண்ணெய் பெரு வியாபாரிகளும் அவர்களது அடிவருடி அரசாங்கங்களுமே ஆதாயமடைந்துள்ளனர், அதேவேளையில் பொது மக்கள் பெருமளவு வஞ்சிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஜூலை முதல் தொடர்ச்சியாக சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள எண்ணெய் விலை குறைப்பால் 2015–16 இல் மட்டும் இந்தியாவிற்கு ரூ1.5 லட்சம் கோடி மிச்சமாகும் என்று ஊடகங்களில் தகவல் வெளியாகியுள்ளது. இதைக் கொண்டு பள்ளிக் கல்வி, சுகாதாரம், பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடு அதோடு கிராமப்புற வேலை வாய்ப்பிற்கான ஊதியம் போன்றவற்றிற்கான அரசாங்கத்தின் நிதித் தேவையைப் பூர்த்தி செய்துவிடலாம். இவ்விலைக் குறைப்பு நீடிக்கநீடிக்க லாபம் மேன்மேலும் அதிகரிக்கும்.

எண்ணெய் அமைச்சகத்தின் சந்தை போக்கை கண்காணிக்கும், கொள்கை திட்டமிடுதல் மற்றும் பகுத்தாய்வு பிரிவு நாட்டின் எண்ணெய் இறக்குமதி இந்த ஆண்டு 88 பில்லியன் டாலராக இருக்கும் என்று தெரிவித்துள்ளது. அதாவது 2014–15இல் 1127 பில்லியன் டாலரைக்காட்டிலும் 22% குறைவாக இருக்கும் என்று தெரிவித்துள்ளது. (டைம்ஸ் ஆஃப் இந்தியா). கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 1 டாலர் குறைந்தால் இறக்குமதி செலவு ரூ6 ட்ரில்லியன் 5 பில்லியன் குறையும் என்று மற்றொரு ஆதாரம் தெரிவிக்கிறது. இதை வைத்துப் பார்த்தால் கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 115 டாலரிலிருந்து 30 டாலராகக் குறைந்துள்ள நிலையில் எவ்வளவு பெரிய தொகை மிச்சமாகியிருக்கும் என்பதை உங்களது யூகத்திற்கே விட்டுவிடுகிறோம்.

இப்படித்தான் முதலாளித்துவ அரசாங்கம் மிகவும் சாமர்த்தியமாக மக்களை கசக்கிப் பிழிந்து வருகிறது, அதற்காகத்தான் பாஜக அரசாங்கம் உழைத்துவருகிறது. அதேபோல் வரும் நாட்களிலும் எண்ணெய் விலையில் மட்டுமல்லாது பொருளாதார ஒடுக்குமுறையின் மற்ற களங்களிலும் இதே சித்து விளையாட்டே தொடரப்போகின்றது.


**DECLARATION**

Statement about ownership and other particulars about the newspaper **PAATTALI CHINTANAI** to be published in the first issue after last of February

**FORM IV (SEE RULE 8)**

| | |
|---|---|
| Place of Publication | : New No 16, Old No 18,Rotler Street, Choolai, Chennai 600 112 |
| Periodicity of its Publication | : Monthly |
| Printer's Name | : V P Nandakumar |
| Nationality | : Indian |
| Address | : New No 16, Old No 18, Rotler Street, Choolai, Chennai 600 112 |
| Publisher's Name | : V P Nandakumar |
| Nationality | : Indian |
| Address | : New No 16, Old No 18, Rotler Street, Choolai, Chennai 600 112 |
| Editor's Name | : V P Nandakumar |
| Nationality | : Indian |
| Address | : New No 16, Old No 18, Rotler Street, Choolai, Chennai 600 112 |

Name and address of Individuals who own the newspaper and partners of shareholders holding more than one percent of the total capital.

**SOCIALIST UNITY CENTRE OF INDIA**
**TAMILNADU STATE ORGANISING COMMITTEE**

I, V P Nandakumar, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

March 1, 2016 **V P Nandakumar**
Signature of Publisher

# ஜே என் யு சம்பவம் . . .

*4ம் பக்கத் தொடர்ச்சி*

*சம்பவங்களை பார்த்தாலும் நாம் தெரிந்துகொள்ளலாம். பீஹார், அசாம், குஜராத் மற்றும் பல பகுதிகளில் பல தருணங்களில் மதக் கலவரங்களை நடத்தியது, வடமாநிலங்களில் இந்துக்களின் வாக்குகளைப் பெறவேண்டும் என்பதற்காக இந்துத்துவா–மீது மென்மைப்போக்கைக் கடைப்பிடித்தது, 1970 தேர்தலில் வெற்றிபெறவேண்டும் என்பதற்காக ஆர்எஸ்எஸ் இடம் இந்திரா காந்தி ஆதரவு கேட்டது, பின்னர் இந்துக்களின் வாக்குகளைக் கவரவேண்டும் என்பதற்காக பாபர் மசூதியை ராஜீவ் காந்தி திறந்துவிட்டு நாட்டையே பற்றிஎரியச் செய்தது போன்ற பல சம்பவங்கள் காங்கிரசின் போலி மதச்சார்பின்மை முகத்திரையைக் கிழித்தெறிந்து விட்டன. பாஜகவுக்கு எதிராக மக்களிடம் எழுந்து வரும் அதிருப்தியைப் பயன்படுத்தி எப்படியாவது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பது மட்டுமே காங்கிரசின் நோக்கம். எனவே பாஜகவின் மதவாதம்–போலி தேசியவாதம்–பாசிசத்திற்கு எதிராக போராடும் மதசார்பற்ற, ஜனநாயக சக்தியாக எவரேனும் காங்கிரஸை கருதினால் அவர் சொந்த அறியாமையால் வீழ்வதோடு பேரழிவையும் உருவாக்கிவிடுவார்.*

### உண்மையான, ஒன்றுபட்ட, சமரசமற்ற இடதுசாரி இயக்கத்தால் மட்டுமே மதவாத அரசியலைத் தடுக்க முடியும்

உண்மையான மதச்சார்பற்ற கோட்பாடுகளின் அடிப்படையிலும் உயர்ந்த கலாச்சாரத்தின் அடிப் படையிலும் சக்திவாய்ந்த, ஒன்றுபட்ட மக்கள் இயக்கங்களை நடத்த இடதுசாரிகள் முன்வந்தால் மட்டுமே ஆர்எஸ்எஸ்–பாஜகவின் பாசிசம்– மதவாதம்–தேசவெறிவாதத்தின் அபாயத்தை எதிர் கொள்ளமுடியும். நாடுமுழுவதும் குறிப்பாக அறிவுஜீவிகள் எழுப்பிவரும் எதிர்ப்புக் குரலை ஒன்றுதிரட்டவேண்டும், அதை சக்திவாய்ந்த, உக்கிரமான, வெகுஜன இயக்கமாக மாற்ற வேண்டும், அந்த இயக்கத்தை அதன் தர்க்கரீதியான சரியான முடிவுக்கான பாதையில் கொண்டுசெல்ல வேண்டும். எனவே, மக்களைப் பிளவுபடுத்தி, சிந்தனைப் போக்கை குருட்டுத்தனமாக்கி, ஜனநாயகத்தின் முகத்தை வைத்துக்கொண்டே பாசிசத்திற்கான அடித்தளத்தை படிப்படியாக வலுப்படுத்தும் பூர்ஷ்வா கட்சிகள் செய்யும் சந்தர்ப்பவாத அரசியலுக்கு உண்மையான மாற்றாக இடதுசாரி போராட்டப் பாதையை வகுக்கவேண்டியது இத்தருணத்தின் அவசியமாகும்.

# ஜே என் யு மாணவர்கள் மீதான கோழைத்தனமான தாக்குதலை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கண்டிக்கிறது

*ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக (ஜே என் யு) விவகாரம் சம்பந்தமாக எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் பிப்ரவரி 18, 2016 அன்று வெளியிட்ட அறிக்கை:*

பாஜக மற்றும் அதன் பரிவாரங்களைச் சேர்ந்த குண்டர்கள் ஜே என் யு பல்கலைக்கழக மாணவர்கள் மீது நடத்திய கோழைத்தனமான தாக்குதலை எமது கட்சி கடுமையாகக் கண்டிக்கிறது. ஜே என் யுவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு அங்கு நிலவும் ஜனநாயகச் சூழல் மீது பழிபோட பாஜக ஏதாவது ஒரு சாக்கை தேடி அலைந்திருக்கிறது என்பது தற்பொழுது தெளிவாகிறது.

பிப்ரவரி 9 அன்று சில மாணவர் குழுக்கள் ஏற்கத்தகாத சில கோஷங்களை எழுப்பினர் என்பது பாஜக தனது பாசிச பற்கள் கொண்டு கடிப்பதற்கு வாய்ப்பை அளித்துவிட்டது. ஜே என் யு மாணவர் பேரவை தலைவரை தடாலடியாக கைது செய்த விதமும், தேச துரோக குற்றம்சாட்டி அவரை கைது செய்ய காட்டப்பட்ட அதீத அவசரகுடுக்கைத்தனமும், மாணவர்கள் மீதும் விமர்சகர்கள் மீதும் சுமத்தப்பட்ட தேசவிரோத பழியும், பாட்டியாலா நீதிமன்றத்திற்கு வெளியே பத்திரிகையாளர்களையும் நீதிமன்ற வளாகத்திற்கு உள்ளே மாணவர் தலைவரையும் அடித்து உதைக்கும் அளவிற்கு சென்றுவிட்ட சில பாஜக தலைவர்களின் அசிங்கமான அணுகுமுறையும் ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜகவின் உயர்மட்ட சதி என்பதையே உறுதியாகக் காட்டுகிறது.

நமது நாட்டின் அறிவுஜீவிகளும், சரியாக சிந்திக்கும் மக்களும், ஜனநாயக எண்ணம் கொண்டோரும் சங்பரிவாரத்தின் படுபாதக திட்டத்திற்கு எதிராக குரலெழுப்புவதும் மாணவர்கள் பக்கம் நிற்பது ஆகியவை நெஞ்சை குளிர வைப்பதாகவும் ஊக்கமளிப்பதாகவும் உள்ளது.

சதித்திட்டத்தின் பாசிசத் தன்மையும், அனைத்து இடதுசாரி மாணவர் சங்கங்கள் மீதான பாஜகவின் வெறுப்பு பிரச்சாரமும் ஆறு இடதுசாரி கட்சிகளின் கூட்டினால் ஒன்றுபட்டு எதிர்க்கக் கோருகிறது.

காங்கிரஸ் கட்சியின் வரலாறு அது ஒரு மதச்சார்பற்ற சக்தியோ ஜனநாயக கட்சியோ இல்லை என்பதையும் சில தேர்தல் ஆதாயம் பெறுவதற்காகவே கோதாவில் இறங்கியிருப்பதையும் தெளிவாகக் காட்டுகிறது. போராட்டத்தில் அது இருப்பது நிச்சயம் பாதிப்புகளையே ஏற்படுத்தும், இந்தப் போராட்டம் நிச்சயம் ஆறு இடதுசாரி கட்சிகளால் ஒருங்கிணைக்கப்பட்டு தலைமைதாங்கி நடத்தப்பட வேண்டுமென நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

# எஸ் வி எஸ் இயற்கை மற்றும் யோகா மருத்துவக் கல்லூரியின் 3 மாணவிகள் மர்ம மரணம் குறித்து நீதி விசாரணை செய்!

*ஏஐடிஎஸ்ஓவின் மாநிலச் செயலாளர் எம் ஜெ வால்டேர் 29.01.2016 அன்று வெளியிட்ட அறிக்கை:*

விழுப்புரம் அருகே உள்ள சின்ன சேலத்தில் இயங்கிவரும் எஸ் வி எஸ் இயற்கை மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி மாணவிகள் மர்மமான முறையில் கல்லூரியின் அருகே உள்ள கிணற்றில் பிணமாக மிதந்தது தமிழ்நாட்டின் மக்கள் மனதை உலுக்கியுள்ளது. அந்த மாணவியர் தற்கொலை செய்து கொண்டதாக செய்திகள் வெளியானபோதிலும் அவர்களின் பெற்றோர் இதைக் கொலை என்று குற்றம் சாட்டுகின்றனர். அக்கல்லூரியில் அடிப்படை வசதிகள் இல்லை என்று தொடர்ச்சியாக அங்கு பயிலும் மாணவ, மாணவியர் தமிழக முதலமைச்சரின் தனிப்பிரிவு, மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகம், மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் என அனைவருக்கும் புகார்கள் அனுப்பியும் எவரும் உரிய நடவடிக்கை எடுக்காததின் பின்னணியில் இந்தக் கோர முடிவு ஏற்பட்டுள்ளது.

கல்வி முற்றிலும் தனியார்மயமாகி வரும் சூழலில், இன்று பெரும்பாலான தனியார் கல்லூரிகள் அடிப்படை வசதிகள், போதிய ஆசிரியர்கள் இன்றி நடைபெற்று வருவதாகவும், அபரிமிதமான கட்டணங்கள் வசூலிக்கப்படுவதா கவும் குற்றச்சாட்டுகள் தொடர்ந்து எழுந்து வந்தபோதிலும் மத்திய, மாநில அரசாங்கங்களும் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களும் அதுகுறித்து கண்டுகொள்வதே இல்லை. இதனால் மாணவர்களும் பெற்றோர்களும் கடுமையாக வஞ்சிக்கப்படுகின்றனர். இத்தகைய சூழ்நிலைமையில், அந்த மூன்று மாணவிகளின் மர்ம மரணம் குறித்து பாரபட்சமற்ற நீதி விசாரணை செய்து, கொலை என்பது உறுதியானால், குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு அனைவருக்கும் உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். மூடப்பட்டுள்ள அக்கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியருக்கு உடனடியாக வேறு தகுதியான கல்லூரிகளில் இடமளித்து அவர்களது கல்வி தொடர வழிவகை செய்ய வேண்டும். அரசாங்கமும், பல்கலைக்கழகங்களும் உடனடியாக தனியார் கல்லூரிகளில் நடைபெறும் முறைகேடுகளைக் கண்டறிய சிறப்புக் குழு அமைத்து ஆய்வுகளை மேற்கொண்டு முறைகேடுகளில் ஈடுபடும் கல்லூரிகளின் மீது தயவுதாட்சண்யமின்றி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (ஏஐடிஎஸ்ஓ) கோருகிறது.

இக்கோரிக்கைகளை வலியுறுத்தி, கல்வியை நேசிக்கும் மக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு போராட முன்வருமாறும் ஏஐடிஎஸ்ஓ அறைகூவல் விடுக்கிறது.

# ரோஹித் வெமுலாவின் தற்கொலைச் சம்பவம்

# ஏஐஎஸ்இசி வன்மையாகக் கண்டிக்கிறது

அகில இந்திய கல்விப் பாதுகாப்பு கமிட்டி (ஏஐஎஸ்இசி)யின் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ கே ரே அவர்கள் ஜனவரி 20 அன்று வெளியிட்ட அறிக்கையில், யுஜிசியின் அங்கீகாரம்பெற்ற விடுதியில் தங்கியிருந்த ஒரு ஆராய்ச்சி மாணவரான ரோஹித் வெமுலாவை ஜனவரி 17 அன்றைய இரவு அதிர்ச்சியூட்டும் தற்கொலைக்கு இட்டுச்சென்ற நிகழ்வுகளுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்தார். அச்சு, மின்னணு ஊடகங் களில் வெளியிடப்பட்ட தொடர் நிகழ்வுகளின்படி பாஜகவின் மாணவர் பிரிவான அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத்தின் தலைவர்களும் மத்திய அமைச்சர்களும் இச்சம்பவத்தின் பின்னணியில் இருந்திருக்கிறார்கள் என்பது மிகத்தெளிவானது என்றார். அச்சுறுத்தல், அவமானப்படுத்துதல், அநீதியின் காரணமாக இரண்டு முக்கிய அமைச்சர்களின் ஒருசார்பு ஜாதியவாத அணுகு முறை மற்றும் செயல்பாடானது ஒரு புத்திகூர்மையுள்ள ஆராய்ச்சி மாணவனை தற்கொலைக்குத் தள்ளியது. ஆணவங்கொண்ட, ஏபிவிபி, பாஜக தலைவர்களின் மனோபாவத்தைப் பார்க்கும்போது தன் மரணத்திற்கு தன் எதிரிகள்உட்பட யாரும் காரணமல்ல என அவருடைய தற்கொலைக் குறிப்பில் கூறியிருப்பதானது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தொடர் நிகழ்வுகள் குறித்து ஒரு முழுமையான விசாரணையும் திரு பண்டாரு தத்தாத்ரேயா, திருமதி ஸ்மிருதி இராணி ஆகிய குற்றம்புரிந்த இரு அமைச்சர்கள், ஹைதராபாத் மத்திய பல்கலை துணை வேந்தர் ஆகியோருக்கு அவர்களுடைய ராஜினாமா உள்ளிட்ட கடும் தண்டனை வழங்கப்படவேண்டும் எனவும் மிகத்தெளிவான வார்த்தைகளில் ஏஐஎஸ்இசி கோருவதாக டாக்டர் ரே அவர்கள் கூறினார். மேலும் இக்கமிட்டியானது கல்வி நிலையங்களின் தன்னாட்சியில் தலையீடு செய்வதையும் நியாயமான காரணத்திற்காக போராடும் மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்களை தாக்குவதையும் அராஜகம் புரிவதையும் நிறுத்திக்கொள்ளுமாறு மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையை ஏஐஎஸ்இசி கேட்டுக்கொள்கிறது.

இந்நிகழ்ச்சியை எதிர்க்கும் மாணவர்கள் மீதும் பிறர்மீதும் மேற்கொள்ளப்படும் போலீஸ் அராஜகத்தை கண்டிப்பது மட்டுமின்றி, ஹைதராபாத்திலும் டெல்லியிலும் பரந்துவிரியும் இதுபோன்ற கொடூர நிகழ்வுகளுக்கெதிராக ஓரே குரலில் கடும் எதிர்ப்பு தெரிவிக்க எழுமாறு நாட்டின் சரியாக சிந்திக்கும் மக்களை இக்கமிட்டி வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

# உயிர்காக்கும் மருந்துகள் மீதான இறக்குமதி வரிவிலக்கினை திரும்பப்பெறும் பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கத்தின் மிகவும் நியாயமற்ற முடிவினை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) எதிர்க்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 07.02.2016 அன்று வெளியிட்ட அறிக்கை:*

புற்று நோய் மற்றும் பிற நோய்களிலிருந்து உயிர்காக்கும் 75க்கும் மேலான மருந்துகளுக்கு இதுநாள் வரையில் இருந்து வந்த இறக்குமதிவரி விலக்கினை திரும்பப்பெற்றுக்கொள்ளும் மத்திய அரசாங்கத்தின் ஈவிரக்கமற்ற மக்கள் விரோத முடிவினை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். இந்த முடிவின் விளைவாக இது போன்ற அத்தியாவசிய மருந்துகளுக்கு இனிமேல் **22** சதவீதத்திற்கும் மேலாக மத்திய கலால் வரி மற்றும் இறக்குமதி வரி விதிக்கப்பட்டு அவற்றின் விலை கடுமையாக உயர்ந்துவிடும்.

பொதுவாக உழைக்கும் மக்களுக்கு இதுபோன்ற மருந்துகளை இலவசமாக வழங்கிடவேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கையில், உள்நாட்டு பெரும் மருந்துகம்பெனிகளின் நலன்களுக்காக அறிவிக்கப்பட்டுள்ள இம்முடிவால் நோயாளிகள் அம்மருந்துகளை வாங்கிடவேண்டி அவர்கள் மேலும் ஒட்ட உறிஞ்சப்படுவார்கள் அல்லது அதிகரித்துவரும் மருத்துவ கட்டண செலவீனத்தை எதிர்கொள்ளவியலாமல் வெறுமனே செத்து மடிவார்கள்.

ஆட்சிகட்டிலிலமர்ந்த பின்பு பாஜக கட்சியானது தொழில் குடும்பங்களுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் மிகப்பெரும் வங்கிக்கடன் பாக்கியை செலுத்துவதிலிருந்து மன்னிப்பு வழங்குவது உள்ளிட்ட அளவற்ற சலுகைகள் மற்றும் தள்ளுபடிகளை ஒருபுறம் வழங்கிக்கொண்டு கொஞ்ச நஞ்சம் இருக்கின்ற மக்கள் நலன்களை திட்டமிட்டு குறைத்திடுவதை வழக்கமாகக்கொண்டிருக்கின்றது.

துயர்பட்டுக்கொண்டிருக்கும் மக்களனைவரும், மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதார ஊழியர்கள் மற்றும் உடல்நலம் தொடர்புடைய அனைவரும் கிளர்ந்தெழுந்து இத்தகைய ஜனநாயகமற்ற எதேச்சதிகார முடிவினை கைவிடுமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்தம் செய்திட சக்திவாய்ந்த, ஒன்றுதிரட்டப்பட்ட போராட்டத்தினை வளர்த்தெடுத்திட வேண்டுமென அறைகூவல் விடுக்கின்றோம்.

# ரோஹித் வெமுலாவின் தற்கொலைக்கு காரணமான பல்கலைக்கழகங்களின் விவகாரங்களில் மத்திய அரசாங்கத்தின் அரசியல் தலையீட்டை ஏஐடிஎஸ்ஓ கண்டிக்கிறது

ஹைதராபாத் மத்திய பல்கலைக்கழகமும் மத்திய அரசாங்கமும் செய்த சித்திரவதை மற்றும் பழிவாங்கும் நடவடிக்கையை தாங்கமுடியாமல் தன் வாழ்வை முடித்துக்கொண்ட அப்பல்கலைக்கழகத்தின் புத்திகூர்மையுள்ள ஆராய்ச்சி மாணவரான ரோஹித் வெமுலாவின் பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஜனவரி **19, 2016**ல் ஏஐடிஎஸ்ஓ (AIDSO) வெளியிட்ட அறிக்கையில். தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தது. பாஜக மற்றுமதன் மாணவர் பிரிவான ஏபிவிபி (ABVP)யின் சித்தாந்தத்திற்கு எதிராக இருந்த **5** ஆராய்ச்சி மாணவர்களை நீக்கம்செய்ய மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சரும் தொழிலாளர் அமைச்சரும் மற்றபிற பாஜக தலைவர்களும் அப்பல்கலைக்கழகத்தை நிர்ப்பந்தித்ததும் மிகுந்த கண்டனத்திற்குரியதாகும்.

இந்தக் கொடூர சம்பவமானது பாஜக மற்றும் சங்பரிவார் அமைப்புக்களின் சகிப்பின்மையின் மற்றுமொரு பிரதிபலிப்பாகுமென அறிக்கை கூறியது. ரோஹித்தின் இந்தத் துயர தற்கொலைக்குக் காரணமான மத்திய அரசாங்கத்தின் கோழைத்தனமான, பழிவாங்கும் நடவடிக்கையானது மத்திய அமைச்சர்கள் குற்றம்புரிந்ததற்கு சற்றும் குறைவில்லாததாகும். பல்கலைக்கழகத்தை நிர்ப்பந்தித்ததன்மூலம் மத்திய அரசாங்கம் அப்பல்கலைக்கழகத்தின் தன்னாட்சியை சட்டவிரோதமாக மீறியுள்ளது. **5** மாணவர்களின்மீது பழிவாங்கும் நடவடிக்கையை மேற்கொண்டதன் மூலம் மத்திய அரசாங்கம் மற்றும் பல்கலைக்கழகத்தின் ஒருசார்பு, ஜனநாயகவிரோத செயலானது அப்பட்டமாக அம்பலப்பட்டுள்ளது.

மத்திய அரசாங்கம் மற்றும் பல்கலைக்கழகத்தின் கொடூரமான ஜனநாயகவிரோத, பழிவாங்கும் முடிவை மீண்டுமொருமுறை வன்மையாக கண்டித்து, மத்திய அமைச்சர்களான திரு பண்டாரு தத்தாத்ரேயா, திருமதி ஸ்மிருதி இராணி, ஹைதராபாத் மத்திய பல்கலை. துணைவேந்தர் பேரா அப்பாராவ் ஆகியோர் உடனடியாக ராஜினாமா செய்யவும், உதவித்தொகையையும் மரணம்சம்பவித்த அக்குடும்பத்தாருக்குரிய இழப்பீட்டையும் உடனடியாக விடுவிக்கவும் ஒரு பாரபட்சமற்ற விசாரணையை அமைக்கவும் ஏஐடிஎஸ்ஓ கோருகிறது.

மற்றொரு அறிக்கையில், ஹைதராபாத் பல்கலைக்கழகத்தின் கூட்டு நடவடிக்கை கமிட்டியால் ஜனவா **27** அன்று அழைப்புவிடுக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் அகில இந்திய மாணவர் வேலைநிறுத்தத்திற்கு தனது தார்மீக ஆதரவை ஏஐடிஎஸ்ஓ நல்கியது.

# டாக்டர் என் ஏ கரீம் அவர்களுக்கு ஏஐஎஸ்இசியின் மரியாதைக்குரிய அஞ்சலி



அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டியின் (AISEC) தலைவர் டாக்டர் என் ஏ கரீம் அவர்களின் திடீர் மறைவு செய்தியறிந்து ஏஐஎஸ்இசி பிப்ரவரி **4, 2016** அன்றைய அறிக்கையில் தனது அதிர்ச்சியையும் ஆழ்ந்த துக்கத்தையும் தெரிவித்தது. அன்றையதினம் மதியம் கேரளாவில் டாக்டர் கரீம் மறைந்தார். டாக்டர் கரீம் அவர்கள் மிகுந்த மரியாதைவாய்ந்த மூத்த கல்வியாளரும் கேரள பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் கல்வி மற்றுமதுபோன்ற முக்கிய சமூக பிரச்சினைகளுக்கான ஒரு சமரசமற்ற போராளியுமாவார். கேரளா உட்பட நாடுமுழுமைக்கும் ஏஐஎஸ்இசியால் அழைப்புவிடுக்கப்பட்ட கல்விக்கான இயக்கங்கள் அனைத்திலும் எப்போதும் முன்னணியிலிருந்தவராவார். தனது மோசமாகிக்கொண்டிருந்த உடல்நிலையிலும்கூட ஏஐஎஸ்இசியின் கேரளப்பிரிவால் முன்னெடுக்கப்பட்ட சமீபத்திய இயக்கத்திலும்கூட தலைமைப் பாத்திரம் வகித்தவராவார். WTO-GATSன் ஷரத்துக்களிலிருந்து கல்வியை வெளிக்கொண்டுவருவது, உலக வணிகத்துக்கான சரக்காக கல்வியை மாற்றுவது அதேபோல கல்வி தனியார்மயம்–வணிகமயமாவதிலிருந்து முற்றிலும் தடுப்பது போன்ற கோரிக்கைகளுக்கான இயக்கத்திற்கும் அவர் தலைமை வகித்தார்.

இத்தருணத்தில் டாக்டர் கரீம் அவர்களுடைய குடும்பத்தார், நண்பர்கள், பேரிழப்பைச் சந்தித்துள்ள அவருடைய ஆதரவாளர்களுடன் அகில இந்திய கல்விப் பாதுகாப்பு கமிட்டிஒன்றுசேர்ந்து நிற்கிறது.

# சிறுசேமிப்பின் மீதான வட்டிவீதத்தை குறைத்திடும் போக்கினை கடுமையாக எதிர்ப்பதுடன் அதனை தடுத்து நிறுத்திட ஒன்றுபட்டதோர் இயக்கத்தினை கட்டிடுமாறு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) அறைகூவியழைக்கின்றது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 12.02.2016 அன்று வெளியிட்ட அறிக்கை:*

சிறுசேமிப்பு வட்டி வீதத்தை அரசாங்க பிணையத்தின் (கவர்மெண்ட் செக்யூரிட்டீஸ்) ஈட்டு வீதத்துடன் (யேர்னிங் ரேட்ஸ்) இணைப்பது மற்றும் வட்டி வீதத்தை ஆண்டுக்கொருமுறை என்பதற்குப்பதிலாக ஒவ்வொரு காலாண்டும் மாற்றியமைத்திடும் மத்திய அரசாங்கத்தின் மிகவும் மக்கள் விரோத முடிவை நாங்கள் கடுமையாய் எதிர்க்கிறோம். இதன் பொருள் தாங்கள் பாடுபட்டு ஈட்டிய பணத்தை பொது சேமநிதி (பிபிஎப்) அஞ்சல் துறை மாதாந்திர வருமான திட்டம், அஞ்சல் துறை நிரந்தர வைப்புநிதித் திட்டம் மற்றும் அஞ்சல் துறை சேமிப்புக் கணக்கு போன்ற திட்டங்களில் சேமித்து வைத்திருப்பவர்கள் அரசாங்கப் பிணையம் மற்றும் அரசாங்க பத்திரங்களின் வட்டிவீதம் சரிவடைவதினால் அவர்கள் குறைந்த பலனையே அடையப்பெறுவார்கள்.

இந்த அறிவிப்பானது வங்கி சேமிப்பின் மீதான வட்டி வீதம் ஒன்றன் பின் ஒன்றாக குறைத்திட்டவுடனேயே வந்திருக்கின்றது. இவ்வாறாக, அரசாங்கமானது கடன் பாக்கியை ரத்து செய்வது, அடுக்கடுக்காக வரிவெட்டு மற்றும் வரிச்சலுகை வழங்கிட முன்வருவதும், சொற்ப வட்டியில் மக்கள் பொதுப்பணத்திலிருந்து மிகப்பெரும் கடன்களை வழங்கிடுவதும் இன்னும் பல விதங்களில் தொழில் குடும்பங்கள் மற்றும் கார்ப்பொரேட் கம்பெனிகளுக்கு மிகத்தாராளமாக இருப்பதும் அதே சமயம் வேகமாக ஓட்டாண்டிகளாகிவரும் நிராதரவற்ற நாட்டு மக்களை பல விதங்களில் பிழிந்தெடுத்திட முனைப்பாயிருப்பதும் தெளிவாகத் தெரிகின்றது. இது மாண்டுகொண்டிருப்பவனை ஈவிரக்கமின்றி கொடூரமாக மேலும் தாக்குவதன்றி வேறெதுவுமல்ல.

முதலாளித்துவ அமைப்பிற்கே உரிய தீர்க்கவியலாத வெளிப்படையாகத் தெரிகின்ற கடுமையான சந்தை நெருக்கடியில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாங்கும் சக்தியானது தொடர்ந்து வீழ்ந்து வருவதால், சந்தையின் தேவையும் வேகமாக சரிந்து வருகின்றது. மேலும் முதலாளித்துவ அமைப்புமுறை வளர்த்துவிட்ட அனைத்து மட்டத்திலான ஊழல் என்பது எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றிக்கொண்டிருக்கின்றது. அதனுள் சிக்கிக்கொண்டிருக்கும் முதலாளித்துவ வர்க்கமும் அதன் அரசாங்கங்களும் உயர்ந்துவரும் ஊழலால் மேலும் அதிகரித்துவரும் முதலாளித்துவ நெருக்கடியின் சுமையை பொருளாதாரத்தை மீட்டெடுக்கின்றோம் என்ற பெயரில் ஒட்டு மொத்தமாக உழைக்கும் மக்களின் தோள் மீது சுமத்திட புதிய புதிய வாதங்களையும் வழிமுறைகளையும் கண்டுபிடித்திட விரும்புகிறது. அதன் காரணமாக வறுமை தோய்ந்த மக்களின் நிலைமை மேலும் மேலும் பேரழிவின் உச்சிக்கே தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேலும் வழக்கம் போலவே இது போன்ற மிக முக்கியமான கொள்கை முடிவுகள் யாவும் ஆண்டு நிதிநிலையறிக்கை (பட்ஜெட்)க்கு அப்பாற்பட்டும் பாராளுமன்றத்தின் அனுமதியின்றும் எடுக்கப்படுவது ஜனநாயகத்தின் போர்வையில் நடத்தப்படும் அப்பட்டமான கொடுங்கோலாட்சியின் அடையாளமாகும்.

சுரண்டப்படும் நாட்டு மக்களனைவரும் இவ்வுண்மையை கண்டுணர்ந்து கொள்ளவேண்டிய தருணம் இதுவே. மேலும் ஆளும் முதலாளித்துவ வர்க்கம் மற்றும் அதன் அரசாங்கத்தின் தொடர்ச்சியான கடும் பொருளாதார தாக்குதலை முறியடித்திட போராட்டத்துடன் மிகப்பெரும் சக்திவாய்ந்த, ஒன்றுதிரட்டப்பட்ட, இடைவிடாத போராட்டத்தினை பிரிவினைவாதம் மற்றும் சுயநலவாதத்திற்கு அப்பாற்பட்ட உயர்ந்த ஒழுக்கநெறி மற்றும் கலாச்சாரத்தினடிப்படையிலமைந்த தலைமையின் கீழ் கட்டவிழ்த்துவிடவேண்டிய தருணமாகும். இப்போராட்டமானது உடனடியாக அலையலையாக ஆர்ப்பரித்தெழுந்திட வேண்டுமென இத்தருணம் நம்மிடம் வேண்டிநிற்கின்றது.

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 31st March 2016

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# பணக்காரர்களுக்கும் முதலாளிகளுக்கும் ஆதரவானது என மத்திய பட்ஜெட்டை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கண்டிக்கின்றது

*மத்திய பட்ஜெட்–2016ஐ கண்டித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 29–02–2016 அன்று விடுத்த அறிக்கை:*

அடிப்படை உணவுப் பொருட்கள் உட்பட சுழன்று ஏறும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள், பெருகிவரும் வேலையின்மைப் பிரச்சினைகள், அடிக்கடி நடக்கும் வேலை இழப்புக்கள், அதிகரிக்கும் வறுமை, உயிர்பிழைப் பதற்கே தேவையான அளவிற்கு ஈட்டமுடியாமல் தட்டுத்தடுமாறும் வருமானம், உயரும் பட்டினிச் சாவுகளின் எண்ணிக்கை, நிர்வாகத்தின் அனைத்து மட்டத்திலும் புரையோடிவரும் ஊழல், செயற்கையாக தேவையை உருவாக்கவும் விலையை உயர்த்தவும் பதுக்கல் வியாபாரிகளின் அதிகரிக்கும் கள்ளச் சந்தை நடவடிக்கைகள், மின்சார, பயணக் கட்டணங்களின் உயர்வு, அடிப்படை மருத்துவ சேவைக்கும் முறையான கல்விக்கும் வழியில்லாமை என இன்னும் பலப்பல எரியும் வாழ்க்கைப் பிரச்சினைகளில் நாட்டு மக்கள் நசுங்கித் தவித்துக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால், கஷ்டப்படும் மக்களுக்கு சிறிதளவாவது நிவாரணம் கிடைக்கும் வகையில் யதார்த்தப்பூர்வ அணுகுமுறையைக் கையாள்வதற்குப் பதிலாக, இனிப்பான வார்த்தை ஜாலங்களின் போர்வையில், அதே பணக்கார ஆதரவு, முதலாளித்துவ ஆதரவு அணுகுமுறையையும் நடவடிக்கைகளையும் மத்திய நிதியமைச்சர் இந்த நிதிநிலை அறிக்கையில் தொடர்ந்து கையாண்டுள்ளார். மக்கள் பிரச்சினைகளைப்பற்றி பெரிதாக எதுவும் பேசாத இப்பட்ஜெட்டில் பிரதானமாகக் காணப்படுவது தொழில் அதிபர்களுக்கும் கார்பொரேட்டுகளுக்கும் புதிதாக முதலீடு செய்வோருக்கும் நீண்ட வரிச்சலுகைகள் அடங்கிய பட்டியலும் வரி ஏய்ப்போருக்கு பொது மன்னிப்பும் ஆகும். இதுபோக பல்வேறு இலாகாக்களுக்கான ஒதுக்கீடு புள்ளி விவரங்களும் வருங்கால வைப்பு நிதி மீது வரி விதிப்பும் மக்கள் முதுகில் சுமையை அதிகரிக்கும் மறைமுக வரிவிதிப்பில் உயர்வும் வழக்கம்போல இதில் இடம்பெறத் தவறவில்லை.

வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பிற்கு என்ன வழி என்ற கேள்விக்கு, இளைஞர்கள் வேலை தேடுபவர்களாக இல்லாமல் தங்களில் சுய தொழிலைத் துவங்குவதன் மூலம் தொழில் முனைபவராகி வேலையை உருவாக்குபவர்களாக மாறவேண்டும் என நிதி அமைச்சர் பதிலுரைத்திருக்கின்றார்.

விவசாயத்தில் அடிப்டை பிரச்சினைகளாக இருக்கும் இடுபொருட்களின் விலையைக் குறைத்தல், விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமல் செய்யும் ஊழல் மிகுந்த இடைத்தரகர்களின் கூட்டை உடைத்தல், அன்றாடம் ரூ20 மட்டுமே சராசரியாக வருமானம் கொண்டுள்ள விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த வழி ஆகிய எவைகுறித்தும் இந்த பட்ஜெட் பேசவில்லை. ஆனால் நீர்ப்பாசனத்தை மேம்படுத்தி, உணவு பதப்படுத்தும் தொழிலில் அன்னிய நேரடி முதலீட்டை 100% அனுமதித்து இன்னும்பல நடவடிக்கைகளை எடுத்து விவசாயத்துறையை முன்னேற்றுவதாக பறைசாற்றுகிறது. இவையெல்லாம் ஊரக பணக்கார விவசாயிகளுக்கு நன்மை செய்யவே புகுத்தப்பட்டுள்ளன.

நிலக்கரியின்மீது செஸ் வரியை இரட்டிப்பு ஆக்கியுள்ளனர். இதனால் மின்கட்டணம் அதிகரித்து மக்கள்மீது சுமை மேலும் ஏறும். ஊக வணிகத்தின் மூலம் விலையை ஏற்றுபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்கு மாறாக உணவுப் பொருட்களின் தொடர்புடைய (உபப் பொருட்கள்) வர்த்தகத்தில் ஊக வணிகத்தை மேலும் அதிகரிப்பதைப்பற்றி நிதி அமைச்சர் பேசியிருக்கிறார். இது, உணவுப்பொருட்களில் ஊக வணிகத்தை பெருக்கி விலை மேலும் அதிகரிக்கும்.

இந்த பட்ஜெட், பணக்காரர்களுக்கும் பெரும் வணிகர்களுக்கும் ஏராளமான நேரடி வரிச்சலுகைகளைக் கொடுப்பதன் மூலமும் ஓட்டாண்டியாகி வரும் மக்களை மேலும் ஒட்டச்சுரண்ட அவர்கள் மீது மறைமுக வரிவிதிப்பை அதிகரிப்பதன் மூலமும் ஏழை–பணக்காரர் வருமான இடைவெளியை மேலும் அதிகரித்துவிடும்.

தம்மீது தொடுக்கப்படும் இப்பொருளாதாரத் தாக்குதலைச் சமாளிக்க நியாயமான கோரிக்கைகளுக்கு அரசாங்கத்தை அடிபணியவைக்க ஒரு சக்திவாய்ந்த, அமைப்புரீதியாகத் திரண்ட மக்கள் இயக்கம்தான் போதிய அழுத்தத்தைக் கொடுக்கும் என்ற உண்மையை சாமானிய மக்கள் புரிந்து கொண்டு அதை நடைமுறைப்படுத்தவேண்டும் என நாங்கள் அறைகூவி அழைக்கிறோம்.

# இரயில் பயணச் சேவையை உருக்குலைத்து வரும் இரயில்வே பட்ஜெட்டை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கண்டிக்கின்றது

*இரயில்வே பட்ஜெட்டைக் விமரிசித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) இன் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 26–02–2016 அன்று விடுத்த அறிக்கை:*

பாஜகவின் மத்திய இரயில்வே அமைச்சர் முன்வைத்த இரயில்வே பட்ஜெட் பொதுப் பயணிகள் அனுபவித்துவரும் ஆழ்ந்த பிரச்சினைகளையும் கஷ்டங்களையும் சப்தமின்றிப் புறக்கணித்துவிட்டிருக்கின்றது. செலவுகளை மட்டுப்படுத்துவதைப் பற்றி அவர் பேசியிருக்கிறார் ஆனால் மலைபோல் உயர்ந்துவரும் ஊழலைப் பற்றியோ உயரும் செலவுகளுக்குக் காரணமான விரயத்தைப் பற்றியோ திருட்டைப் பற்றியோ எங்கும் குறிப்பிடவில்லை. 1.85 இலட்சம் கோடி வருவாய் ஈட்டுவதைப் பற்றி பேசியிருக்கிறார். ஆனால் எங்கிருந்து அந்தப் பணம் வரும் என்ற ஆதாரத்தைக் குறிப்பிடவில்லை.

பயணிகள் மற்றும் சரக்குக் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்பதில் நாம் ஆனந்தப்பட வேண்டியதில்லை. இவை பட்ஜெட்டிற்கு முன்னும் பின்னும் எந்த நேரத்திலும் பாராளுமன்ற விவாதத்திற்கு கொண்டுவராமலேயே நிர்வாக ஆணைகளின் மூலம் ஏற்றிக்கொள்ளலாம் என்றமுறை வழக்கத்திற்கு வந்துவிட்டது எவரும் அறிந்ததே. நேரடி கட்டண உயர்வு போக, அதிவிரைவு வண்டிக்கான சிறப்புக் கட்டணம், தட்கல் ஒதுக்கிட்டை உயர்த்துதல், தேவைக்கு ஏற்ப டிக்கெட் விலையை ஏற்றிக்கொள்ளும் முறை, நடைமேடைக் கட்டணத்தை இரட்டிப்பாக்குதல் அ ல்லது குறைந்தபட்ச டிக்கெட் கட்டணத்தை அதிகரித்தல் போன்றவற்றின்மூலம் பின்வாசல் வழியாகவும் கட்டண உயர்வைக் கொண்டு வருகின்றனர். வரும் ஆண்டுகளில் இதுபோல் நடக்காது என்று எந்த உத்தரவாதத்தையும் இரயில்வே அமைச்சர் உறுதியளிக்கவில்லை. நேரம் தவறாமை என்ற வார்த்தையே இரயில் அகராதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்ட சூழ்நிலையில் 2020ம் ஆண்டிற்குள் 95 சதவீதம் நேரம் தவறாமை எட்டப்பட்டுவிடும் என அறுதியிட்டுக்கூறுவதின் மூலம் இப்பிரச்சினையை தீர்வு காண்பதிலிருந்து அமைச்சர் நழுவிச்சென்றுவிட்டார்.

திருட்டு, பெண்கள்மீதான வன்முறை அதிகரித்தல் என இவற்றிற்கு எதிராக பயணிகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய எந்த திட்டமும் தெளிவாகப் போடப்படவில்லை. அதேபோல் விபத்துக்களைத் தடுக்க தண்டவாளங்கள், பாலங்கள் முறையாகப் பராமரிப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து எதுவும் குறிப்பிடவில்லை. பாதுகாப்பு விவகாரம் குறித்து மேம்போக்காக மட்டும் சில விஷயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதேபோல, அரசாங்கம் சுத்தத்தைப் பற்றி எவ்வளவு பேசினாலும், மலக் கழிவுகளை அகற்ற பயோ டிஸ்போசபுல் முறை, கூப்பிட்ட குரலுக்கு துப்புரவுத் தொழிலாளி வருவார் என்பனபோன்ற புதுமைகள் புகுத்தப் பட்டாலும் ரயில் பெட்டிகளும் ரயில் நிலையங்களும் எவ்வளவு அழுக்காக குப்பைக்காடாக இருக்கின்றன என்பதை பயணிகள் அனுபவத்தில் தெரிந்து கொண்டுள்ளனர்.

சில ஹை–டெக் கனவு இயந்திரங்களை (உணவுப்பொருட்கள் – பயணச்சீட்டுக்கள் வழங்க) கொண்டுவருவதாக சம்பிரதாயமாக உறுதி அளிக்கப்பட்டது. இவை எப்படிப் பயனற்றவை, வெறும் அலங்காரத்திற்காக மட்டுமே பயன்படுபவை என மக்கள் அனுபவத்தில் பார்த்திருக்கிறார்கள். அதேசமயம் இப்படிப்பட்ட அறிவிப்புகள் செய்ததன் மூலம் உண்மையில் மிக வேகமாக உருக்குலைந்துவரும் ஊழல் மலிந்த இரயில் சேவையில் மறைந்திருக்கும் கரையான்புற்றை இந்த பட்ஜெட் சப்தமின்றி மூடி மறைத்திருக்கின்றது. மிகவும் ஆரவாரத்துடன் அரசாங்கம் அறிவித்த வளர்ச்சித் திட்டங்கள் ஒன்று கைவிடப்பட்டுவிட்டன அல்லது தொங்கலில் விடப்பட்டு விட்டன. பொது மற்றும் தனியார் கூட்டு (Public Private Partnership - PPP) திட்டங்கள் ஏற்றுக் கொண்டதன்மூலமும் சில தனியார் சிறப்பு சேவை வழங்கும் நிறுவனங்களின் துணையுடன் துவக்கப்படும் தேஜாஸ் சிறப்புச் சேவையை அறிவித்ததன் மூலமும் படிப்படியாக இரயில்வேயை தனியார்மயமக்கும் வஞ்சக முயற்சியும் புலப்படுகின்றது. இரயில்வேத் துறையில் இவ்வாறு பரவலாக கொண்டுவரப்படும் தனியார்மயம், இருக்கும் வேலைவாய்ப்பையும் பறித்துவிடும்.

தந்திர வார்த்தைகளால் மக்களை மீண்டும் மீண்டும் ஏமாற்றும் மிக மோசமான இரயில்வே பட்ஜெட்டை திட்டமிட்டு எதிர்த்துப் போராட மக்கள் முன்வரவேண்டும் என நாங்கள் அறைகூவி அழைக்கிறோம்.

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் , அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : அய்யனார் ஆப்செட் எண் 10, சுப்பாராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்*

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.sucicommunist.org